"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

காரை

# ஆதித்தியன்

காலாண்டு சஞ்சிகை

தலைமை அலுவலகம் : Karai Aathiththiyan, Thambiah Dayaparan B.A, Postlagernd, 4102 Binningen-1, Switzerland.

விஜய வருடம் மார்கழி மாதம் 2013 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பக்கங்கள் 16 | விலை ரூபா: 30.00

KARAIAATHITHTHIYAN TAMIL QUARTERLY சுடர் 23

பதிப்பு Registered as a Paper at The G.P.O e.mail: karaiaathiththiyan1@msn.com

## லண்டன் காரைக்கதம்பம் 2014
### பொங்கல் விழா

காலம் : 25.01.2014

இடம் : KINGSBURY HIGH SCHOOL
PRINES AVE, LONDON.

தொடர்புகளுக்கு :- நிர்வாகம்

## பிரான்ஸ் காரைஸ்வரங்கள் 2014
### ஆண்டு விழா

காலம் : 16.02.2014

இடம் : PARIS CITY

தொடர்புகளுக்கு :- நிர்வாகம்

# வட இலங்கை காரைநகரில் ஓர் மைல்கல்



கடந்த ஐப்பசி மாதம் 14ம் நாள் (2013) காரைநகர் அபிவிருத்திப் பாதையில் ஓர் மைல்கல் மாணவ நூலக திறப்பு

(செய்தி 14 ஆம் பக்கம்)

## காரைநகர் புதிய பிரதேச செயலகம்



(செய்தி 3 ஆம் பக்கம்)



## பாடசாலைகளில் வலியுறுத்தப்படும் மதச்சார்பின்மை

(செய்தி 4 ஆம் பக்கம்)

## தமிழ் (இந்த உலகின் பழமையான மொழி தமிழ்)

(செய்தி 6 ஆம் பக்கம்)

## எமது ஊர் தெரிந்து கொள்வோம்
வினாக்கள்

(செய்தி 10 ஆம் பக்கம்)




## காரைநகர் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும்

(செய்தி 15 ஆம் பக்கம்)

மலேசியா திருமுருகன் திருவாக்கு திருப்பீடத்தின்

## அனைத்துலக முருக பக்தி மாநாடு 2014



அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், சுவிற்சர்லாந்து
(02.05.2014 - 04.05.2014)

(செய்தி 12 ஆம் பக்கம்)

## இந்த பூமியிலேயே மிகச் சிறந்த பேச்சு

(செய்தி 5 ஆம் பக்கம்)



தமிழனிடம் வீரம், விவேகம், அறிவு, ஆயுதம், பணம், பாசம் முப்படைகளும் இருந்தும்தமிழர் தமிழர்களுடைய வாழ்வுப் பயணம் தடம் புரண்டு போவதற்குக் காரணம்...

(செய்தி 11 ஆம் பக்கம்)

## பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு உதவி

(செய்தி 3 ஆம் பக்கம்)



## லிங்கம்

(செய்தி 2 ஆம் பக்கம்)

## புதிய தர்ம மடாலயம்



(செய்தி 13 ஆம் பக்கம்)

## ஆதி கருத்துப் பதிவு

இலங்கையை பொறுத்தவரை இலங்கைச் சமூகங்களை இணைத்தல் என்ற விடையத்தில் அரச இயந்திரம் எப்போதும் போலவே தவறு இளைத்து வருகிறது. அது அவர்களின் சுயாதிபத்தியத்தின் நலன் என்று கூறி விடுவது சிறந்தது.

இதில் என்ன வேடிக்கை என்றால் நாம் எல்லா சந்தர்பத்தில் சரியாகவே செயல்பட்டு வருகிறோம் என்பது அவர்களது அறிக்கை நடமுறை அதற்கு புறம்பானது.

மணல் வீடு போல் அரச முயற்சி இலங்கையில் காணப்படுகிறது. கடல் வந்தால் எப்படி மணல்வீடு கரைகிறதோ அதுபோலவே கோபம் கொண்ட போது உண்டான எல்லா விளைவுகளாலேயே இன்று உலகம் திரும்பி பார்த்து உரிமை மீறல் என்று சொல்லப்பட்டு நீதிமன்றம் வரும்படி அழைப்பாணை விடுக்கப் படுகிறது. அதை இன்று மறந்து மறப்பது கையிலுள்ள அதிகாரத்தினால் அதன் வலு இல்லாத போது உண்மையின் தாக்கம் புரிந்துவிடும்.

எவரும் குற்றம் செய்துவிட்டு தண்டனை யிலிருந்து தப்பிவித்து விட முடியாது விதி என்பது காலத்தின் கையில் அமர்ந்திருக்கிறது. அது கையிலிருந்து நழுவும் போது குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைப்பது காலத்தின் கட்டாயம், அது இன்று இல்லாமல் நாளை இல்லாமலும் இருக்கலாம். ஆனால் நாளை என்ற வார்த்தைக்குள் ஆணித்தரமாக மறைந்து நிற்பது எவரும் தெரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை இந்த விதி முறை விதியினால் தீர்மானமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்போ காலம் ஒழுக்கம் பண்பு இவற்றிலிருந்து எக்கணத்திலும் விலகாது நேர்மை என்பதை தொடர்ந்தால் அதுவே சிறந்த வழி நல்ல வாழ்வும் கூட!

ஆசிரியர்
**ஆதித்தியன்**

## மணிவாசகர் மடாலயத்தில் ஐம்பொன்னிலான மணிவாசகர் திருவுருவம்



மணிவாசகர் மடாலயத்தில் ஐம்பொன்னிலான மணிவாசகர் திருவுருவம் பிரதிஸ்டை செய்யப்பட்டது!
காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் ஐம்பொன்னாலான மாணிக்கவாசகர் சுவாமிகள் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது.
ஞாயிற்றுக்கிழமை 17.11.2013 அன்று மாணிக்கவாசகர் சிலை ஈழத்துச் சிதம்பரத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டு திருவாசகம் முற்றும் ஓதப்பெற்று திருவீதி உலாவாக மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவுருவச்சிலை கொண்டு செல்லப்பட்டு மாணிக்கவாசகர் மடாலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது.
22ம் திகதி வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.08 மணிக்கு மாணிக்கவாசகர் சுவாமிக்கான கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

### கனடா
## காரை வசந்தம் 2013

**காலம் : 07.12.2013**
**நேரம் : மாலை 5 மணிக்கு**
**இடம் : TORONTO, CANADA**



# லிங்கம்

### சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும்,

லிங்கம், சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், சிவ லிங்கம் பற்றி ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் கிடைத்த முடிவு. [ஒரு ரெண்டு நிமிஷம் நேரத்தை ஒதுக்கி ரஷ்ய விஞ்ஞானி சொல்வதை படித்து பாருங்கள். ஒவ்வொரு இந்துவும் படித்து பகிர வேண்டிய அறிய விசயம்]

சிவலிங்கங்களைப் பற்றிய டாக்டர் "விளாதி மீரின்" என்பவரின் ஆராய்ச்சி மிக வித்தியாசமானது. அது இந்த பூமியில் மொத்தம் எத்தனை லிங்கங்கள் உள்ளன என்று எண்ணிப் பார்க்கவோ, இல்லை அவற்றின் பூர்வ புராணக் கதைகளை அறியவோ முயலவில்லை. இவற்றுக்கப்பால் சிவலிங்கங்கள் பற்றி நாம் யோசிக்கவும் அதை நாம் நேசிக்கவும் நிறைய அடிப்படைகள் இருப்பதாக டாக்டர் விளாதிமீர் கருதினார். அதில் முதலாவது, ஸ்தூல வடிவங்களில் இறை உருவங்களை உருவாக்கி வழிபாடு செய்யும் இந்து மதத்தில் ஒரு குழவிக் கல்லைப் போன்ற லிங்கம் என்னும் உருவமற்ற ஒரு உருவம் எப்படி உட்புகுந்தது என்பதுதான்.

உண்மையில் லிங்க சொரூபமானது மூன்று மதத்திற்கும், புத்த ஜைனர்களுக்கும் கூட பொதுவானது என்பதையும் அவர் கண்டுபிடித்தார்.

ஒரு மலை உச்சி! அதில் பௌர்ணமி இரவில் கரிய நிழல் உருவாய் கண்ணுக்குத் தெரிந்த லிங்க உருவத்தை ஒரு கிருத்தவன் சிலுவைச் சின்னமாகப் பார்த்தான். ஒரு இஸ்லாமியன் தங்களின் மசூதிக் கூரை தெரிவதாக கருதினார். புத்த ஜைன சன்யாசிகள் தங்கள் குருமகாங்கள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருப்பதாகக் கருதினார்கள்.

உருவம் ஒன்று. ஆனால் அனைத்து மார்க்க தரிசிகளையும் அது திருப்திப்படுத்தியது என்றால் சிவம்தான் முதலும் முடிவுமான அனைவருக்கும் பொதுவான இறை ஸ்வ'ரூபமா? டாக்டர் விளாதிமீர் இப்படிதான் கேட்கிறார்.

மேலும் அவர் புராணங்களிலும், இதிகாசங்களிலும் சிவம் பற்றி சொன்னதை அவர் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை.

லிங்க உருவம் பற்றி யாரும் சரியாக உணரவில்லை என்பதுதான் அவரது கருத்து.

ஒரு ரஷ்ய நாட்டுப் பிரஜையாக இருந்தாலும் சிவலிங்க சொரூபம் அவருக்குள் ஆழமான பாதிப்புகளை உருவாக்கியதாக அவர் கூறுகிறார்.

லிங்கம், சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், ஒவ்வொரு கோணத்தில் இருந்து பார்க்கும்போதும் ஒருள் பொருள் தருவதாகவும் இருக்கிறது என்பது அவர் கருத்து. குறிப்பாக அணு தத்துவம் சிவலிங்க சொரூபத்துக்குள் விலாவரியாக இருக்கிறது. லிங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தால், அது மழை தரும், நெருப்புத் தரும், காற்று தரும் கேட்ட எல்லாம் தரும், என்றும் நம்புகிறார்.

அப்படி என்றால் சிவமாகிய லிங்க ஸ்வரூபம் என்பது மானுடர்கள் பயன்படுத்தத் தெரியாமல் வைத்திருக்கும் மகத்தான ஒரு எந்திரமா?

டாக்டர் விளாதிமீரின் சிவஸ்வரூப ஆராய்ச்சியில் ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் ஒன்றும் அவருக்குக் கிட்டியதாம். இந்த மண்ணில் பூமிக்கு மேலாக கண்ணுக்குத் தெரியும் விதத்தில் உள்ள லிங்க ஸ்வரூபங்கள் இல்லாமல் பூமிக்குள் புதைந்து கிடக்கும் ஸ்வரூபங்களும் ஏராளமாம்! அதுவே அவ்வப்போது ஸ்வயம்பு மூர்த்தியாய் வெளிப்படுகிறதாம்.

ஸ்வயம்பு மூர்த்தங்களின் பின்புலத்தில் பஞ்சபூத சக்திகளின் இயக்கம் ஒரு சீராகவும், ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த கூட்டுறவோடும் செயல்படுகிறதாம்.

சுருக்கமாகச் சொன்னால், அந்த மூர்த்தங்களைப் பஞ்ச பூதங்கள் ஆராதிக்கின்றன என்பதே உண்மை என்கிறார்.

இப்படிப்பட்ட ஆராதனைக்குறிய இடங்களில் கூர்ந்து கவனித்தபோது பஞ்ச பூதங்களும் சம அளவிலும் அத்துடன் சீரான இயக்கத்துடனும் அவை இருக்கின்றன. மனித சரீரத்திலும் பஞ்ச பூதங்கள் உள்ளன. இவை சுயம்புலிங்க ஸ்தலங்களில் இயற்கையோடு கூடிச் செயல்படுகின்றன என்கிறார்.

அதாவது சுயம்பு மூர்த்தி உள்ள ஸ்தலங்களில் வாழும் மனிதர்களே அந்த மண்ணுக்கான மழை. காற்று, அக்கினி மண்வளம் ஆகியவைகளைத் தீர்மானிக்கிறார்கள் என்று கூறும் விளாதிமீர், மதுரை போன்ற சுயம்புலிங்க ஸ்தலங்களில் கூடுதலான மழை அல்லது குறைவான மழைக்கு அங்கு வாழும் மக்களின் மனநிலையே காரணமாகிறது என்கிறார். சுயம்பு லிங்கங்கள் உள்ள மண்ணில் வாழும் மக்கள் மனது வைத்தால் அங்கே எதை வேண்டுமானாலும் உருவாக்கிட இயலும் என்றும் கூறுகிறார்!.

இந்த பூமியானது சூரியன் உதிர்ந்த ஒரு சிறிய அக்னித் துளி என்கிறது விஞ்ஞானம். மெல்லக் குளிர்ந்த இதில் அடுக்கடுக்காய் உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்த உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கூட அப்போது தோன்றின. இதுதான் பல கோடி ஆண்டுகளைக் கண்டு விட்ட இந்த பூமியின் சுருக்கமான வரலாறு.

மாற்றம் என்பதே இந்தப் பூமியில் மாறாத ஒன்றாக என்றும் இருப்பது. அந்த மாற்றங்களால் வந்ததே இந்த மனித சமூகம். கூன் விழுந்த, கொத்துக் கொத்தான முடி கொண்ட ஏழு எட்டு அடிக்குக் குறையாத உயரம் கொண்ட குறைந்த பட்சம் 150. கிலோ எடையுடன் தொடங்கியதுதான் சராசரி மனிதனின் உடலமைப்பு.

இன்று அவன் சராசரியாக ஐந்தரை அடி உயரம், எண்பது கிலோ நிறை, நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை என்று மாறியிருக்கிறான். பல ஆயிரம் ஆண்டுகளாக இந்நிலையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. ஆனாலும் காலப்போக்கில் இவன் மேலும் குட்டியாகி சுண்டிச் சுருங்கி வினோதமான முக அமைப்பை எல்லாம் பெற்று, ஒரு பெருச்சாளி போல் நிலப்பரப்பைக் குடைந்து அதனுள் ஊர்ந்து சென்று பதுங்கி வாழும் காலம் வரலாம் என்பதெல்லாம் விஞ்ஞான அனு, மானங்கள். இந்த பூமியில் கிடைக்கும் பலவித ஆதாரங்களும், மனித மனத்தின் ஊகம் செய்து பார்க்கும் சக்தியுமே!

இதன் நடுவே மிக மாறுபட்ட கருத்துகளுடன், நமக்கிருக்கும் அறிவாற்றலால் நம்பமுடியவில்லை என்று ஒரு வார்த்தையில் கூறும் விதமாய் இருப்பதே மதப் புராணங்கள். இதில் புராணவழி அறியப்பட்ட சிவமானது தனித்து நிற்கிறது. புராணம், விஞ்ஞானம் இரண்டையும் கடந்து மூன்றாவதாய் ஒன்றும் உள்ளது. அதுதான் நான்! மானுடமே முடிந்தால் என்னைப் புரிந்துகொள் என்பதுபோல் இருக்கிறது அது என்கிறார் டாக்டர் விளாதிமீர்!"

இந்த பூவுலகில் சிவம் தொடர்பான அடையாளக் குறியீடுகள் பாரத மண்ணில் மட்டுமன்றி ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் கூட இருக்கிறது என்பது டாக்டர் விளாதிமீரின் கருத்து.

அமெரிக்காவில் "கிராண்ட் கன்யான் "என்னும் வித்தியாசமான மலைப் பகுதியில் பராசக்தியின் அம்சங்கள் என்று வர்ணிக்கப்படும் "சிவம், விஷ்ணு, பிரம்மன் "மூன்றின் அடையாள உருவங்கள் காணப்படுகின்றனவாம்.

ஆயினும் இந்திய மண்ணில் மட்டும் சிவம் தொடர்பான சிந்தனைகளும் சைவம் என்கிற ஒரு பிரிவும் உருவாக ஆழமான ஒரு காரணம் இருப்பதாக விளாதிமீர் கருதுகிறார்.

உலகின் உயர்ந்த சிகரமான இமயம் பூகோள ரீதியில் பூமியின் மையத்தில் (கிட்டதட்ட) காணப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த உலகே கூட சிவலிங்க சொரூபம் எனலாம். ஒரு வட்டத்தில் இருந்து கூம்பு முளைத்தது போல் உலகமே ஆவுடையராகத் திகழ இமயம் சிவஸ்தம்பமாக எழும்பி நிற்கிறது.

அங்கே பஞ்ச பூத ஆராதனையாக குளிர்ந்த காற்றும் உறைந்த பனியே நீராகவும், அதன் முற்றிய குணமே நெருப்பாகவும் இருக்கிறது. ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட வெளி வேறு எங்கும் காணப்படாத விதத்தில் தூயதாக எல்லாவித கதிர் வீச்சுக்களையும் காணப்படாததாகக் திகழ்கிறது.

இங்கே உயிராகிய ஜீவன் மிகச் சுலபமாக சிவத்தை அடைந்து விட (அ) உணர்ந்து விட ஏதுவாகிறது. அதனாலேயே இங்கே ஞானியர் கூட்டம் அதிகம் இருக்கிறது என்பதும் அவரது கருத்து!

இந்த ரஷ்ய விஞ்ஞானி சொன்ன விஷயங்கள் எதுவும் எந்த விஞ்ஞானியும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இது எத்தனை பேருக்கு தெரியும்? அவசியம் பகிரவும்...)

SIVAPURAM சிவம் எழுந்தபோதெல்லாம் தமிழும் தமிழனும் எழுச்சி பெற்றனர் என்பது வரலாறு கூறும் உண்மை!

நற்றவா! உனை நான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே

# காரைநகர் புதிய பிரதேச செயலகம்

60 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட காரைநகர் பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்பு விழா 18.09.2013 புதன்கிழமை நடைபெற்றது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வ்வத்தார். காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் அரச உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# பெற்றோரை இழந்த

## மாணவர்களுக்கு உதவி

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 260 பிள்ளைகள் தாய். தந்தையர் அல்லது இருவரையும் இழந்தவர்களாகவும், தந்தையர்கள் தொழில் செய்யக்கூடிய ஆற்றல் அற்றவர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளனர்.

அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதற்காக கரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் தலா 500 ரூபா வீதம் ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்களும் பால்மாப் பைக்கற்றும் 260 பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இச்சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சீருடைகள், பாதணிகள், பிரத்தியேக வகுப்புகளுக்கான கட்டணங்கள், போக்குவரத்திற்கான கட்டண செலவினங்கள் என்பவற்றை நிதிரீதியாக அன்றிப் பொருள்ரீதியாக வழங்க சில அன்பர்கள் முன்வந்துள்ளனர் எனவும் இந்நடவடிக்கை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் எனவும் சமுக சேவையாளரும் ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளருமான எஸ்.கே.சதாசிவம் தெரிவித்துள்ளார். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி 'ரூபினி வரதலிங்கம் மங்கள விளக்கேற்றுதனையும் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் பால்மா அடங்கிய பொதிகையினை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.



# பிறந்த நாள் விழாவில் கைவரிசை

கடந்த 27.10.2013 பாசல் மாநிலத்தின் பிராத்தலன் கிராமத்தில் இடம் பெற்ற கோலாகலமான பிறந்த நாள் வைபவத்தில்

**பிள்ளையின் தாயாரின் கையடக்க பையிலிருந்து 3800 SFR ரொக்க பணத்தை மிக சாதுர்யமாக எடுத்துள்ளார்கள்.**

விழாவில் கலந்து கொண்டவர்கள் மிகவும் கவலையடையும் படியான இச்செயல் பலரையும் வேதனைப்படுத்தியுள்ளது.



## பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் இரண்டாவது கட்ட

# கண்சத்திரசிகிச்சை பத்துப் பேர்

## பயன் பெற்றனர்

காரைநகர் அபிவிருத்திச் சபையினால் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் இரண்டாவது கட்டமாக கற்றாக் நோயினால் பாதிக்கப்பட்ட பத்து பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிக வறுமையில் வாடும் தாங்கள் கண் பார்வைக்குறைவினால் அவதிப்படுவதாகவும் தமக்கான கண் சத்திரசிகிச்சைக்கு உதவுமாறு கோரி காரைநகர் அபிவிருத்திச் சபையிடம் சுமார் இருபதிற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்கள் அனைவரும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் குகதாசன் அவர்களினால் பரிசோதிக்கப்பட்டு உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய பத்துப்பேருக்கு கடந்த வாரம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வைத்து கண்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னரும் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் இருபது பேருக்கு கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக்கட்ட கண் பரிசோதனை இடம்பெறுவதையும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதனையும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர் களையும் படங்களில் காணலாம்.



# ‘மதச்சார்பின்மை கோட்பாடு வாசகச் சட்டகம்’

1. பிரான்ஸ் ஒரு பிரிக்க முடியாத, ஜனநாயக, சமுதாய அக்கறை கொண்ட மதச்சார்பற்ற நாடாகும். இது நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சட்டத்தின் முன் சமம் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. அனைத்து சமூக, மதநம்பிக்கைகளையும் மதித்து நடக்கும் குடியரசு.
2. மதச்சார்ப்பற்ற பிரான்ஸ் குடியரசு மதங்களையும் அரசையும் இரு பகுதிகளாகப் பிரிக்கின்றது. மத அல்லது ஆன்மீக நம்பிக்கைகள் குறித்து அரசு தனது நடுநிலையைப் பேணுகின்றது. அரச மதங்கள் என்று எதுவுமில்லை.
3. *La Laicité* உங்கள் சுய உணர்வுகளை, தேர்வுகளை ஒரு போதும் தடை செய்யாது. நீங்கள் மதச்சார்ப்பு உள்ளவராகவோ, இல்லாதவராகவோ இருப்பது உங்கள் உரிமை. உங்கள் மத நம்பிக்கைகளை வெளிப்படுத்த எந்தத் தடையுமில்லை. அதேநேரம் பொது வெளியில் அதன் எல்லைகளுக்கு உட்பட்டதாகவும், பிறரின் மத நம்பிக்கைகளை மதிப்பவர்களாகவும் இருக்கக் கடமைப்பட்டுள்ளோம்.
4. பொது நோக்கில் பார்க்கும் போது அனைத்து மக்களின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்வற்றை அனைவரும் செயல்படுத்த, ஒத்துப் போக ஒவ்வொரு வருக்கும் மதச் சார்பின்மை வழிவகுக்கின்றது.
5. குடியரசு தனது கல்வி நிர்வாகங்களில் ஒவ்வொரு தனிமனித தெரிவுகள், விருப்பங்கள், கொள்கைகளை மதிக்கும் என உறுதியளிக்கிறது.
6. மதச்சார்பற்ற பாடசாலைகள், மாணவர்கள் தங்கள் ஆளுமைகளை வடிவமைக்க அனுமதிக்கிறது. அத்துடன் மதம் பற்றிய சுய தேர்வை எந்தவித அழுத்தங்களுமின்றி எடுக்க வழிவகுக்கிறது.
7. மாணவர்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு பொதுக் கலாச்சாரத்தை தோற்றுவிக்க வழிவகுக்கிறது.
8. மாணவர்களின் பாடசாலை எல்லைகளுக்குட்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கும் அவர்களின் மென்மையான செயற்பாடுகளுக்கும் பலதரப்பட்ட நம்பிக்கைகளுக்கும் மதச்சார்பின்மை அனுமதி அளிக்கிறது.
9. *La Laïcite,* இனம், பால், அரசியல் என்ற அனைத்து பாகுபாடுகளையும், அனைத்து வன்முறைகளையும் நிராகரிக்கிறது. அத்துடன் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான சமத்துவத்தைப் பேணி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நடக்கும் ஒரு பண்பாட்டுக் கலாசாரத்திற்கு உத்தரவாதமளிக்கிறது.
10. இது அனைத்து கல்வித்துறை சார் பணியாளருக்குமானது. மாணவர்களுக்கு மதச்சார்பின்மையின் சரியான விளக்கத்தை அதன் மதிப்பை எடுத்துரைக்க வேண்டும். அதேபோல் அவர்களுக்கு குடியரசின் மற்றைய கோட்பாடுகளையும் விளக்க வேண்டும். அத்துடன் வகுப்பறைகளிலும் La Laïcité சாசனம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? பெற்றோர்களின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்டதா எனக் கவனிப்பதும் உங்களது கடமையாகும்.
11. கல்வித்துறைசார் பணியாளர்களுக்கும் கடுமையான நடுநிலைமையான ஒரு கடமையுள்ளது. அவர்கள் தங்கள் கடமை நேரத்தில் தமது அரசியல் அல்லது மத நம்பிக்கைகள் வெளிப்படுத்தக் கூடாது.
12. கல்வி முறையும் மதச்சார்பற்றது. அதை மாணவர்களுக்கு உறுதி செய்ய அவர்களுக்கு உலகளாவிய கண்ணோட்டங்களையும், பன்முகத்தன்மை வாய்ந்த விளக்கங்களையும் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். அறிவியல் சார் மற்றும் கல்வி தொடர் கேள்விகள் தவிர்த்து வேறெந்த கேள்விகளுக்கும் முன்னுரிமை அளிக்க தேவையில்லை. எந்தவொரு மாணவனும் பாடத்திட்டத்தில் இருக்கும் ஒரு கேள்வியை தனது அரசியல் அல்லது மத நம்பிக்கையின் அடிப்படையில் ஆசிரியருடன் சவால் விட உரிமை இல்லை.
13. குடியரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் எந்த ஒரு விதிமுறைகளையும் தனது மத வெளிப்பாட்டின் அடிப்படையில் இணங்க மறுக்க முடியாது.
14. அரச பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் உள் விதிமுறைகள் *La Laïcité*ன் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை. ஆகையினால் மாணவர்கள் வெளிப்படையாக எந்தவொரு மத அடையாளத்தையும் வெளிப்படுத்தும் வண்ணம் ஆடை அணிதல் தடை செய்யப்பட்டுள்ளது.
15. மாணவர்களின் எண்ணங்களும் செயற்பாடுகளும் மதச்சார்பின்மைக்கு தங்கள் பங்களிப்பை வழங்குகின்றன.

## பாடசாலைகளில் வலியுறுத்தப்படும்

# மதச்சார்பின்மை

பிரான்சின் மதச்சார்பின்மை கொள்கை (Lā Laïcité) மீண்டுமொருமுறை பாடசாலைகளுக்கூடாக நினைவூட்டப்படுகிறது. குடியரசின் மதிப்பை, மேன்மையை பகிர்ந்து கொள்ளவும், மனித உரிமைகள் மீதான சட்டப்பிரகடனங்களை மாணவர்களுக்கு விளக்கவும் பிரான்ஸ் அரசு, பாடசாலை நிர்வாகங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.



**“பாடசாலைகளில் மாணவர்கள் வெளிப்படையாக எந்தவொரு மத அடையாளங்களை அணியவோ அல்லது தங்கள் மத நம்பிக்கைகளைப் போதிக்கவோ La Laïcité ஒருபோதும் அனுமதிக்காது.”**

பிரான்ஸ் குடியரசானது கிறிஸ்தவ தேவாலயங்களின் கட்டுப்பாட்டிலிருந்து 1905ம் ஆண்டு தம்மை விடுவித்துக் கொண்டதன் மூலம் தன்னை மதச்சார்பில்லாத குடியரசாக நிலைநிறுத்திக் கொண்டது. பாடசாலைகளில் மதச்சார்பின்மையை வலியுறுத்த பிரான்சின் கல்வி அமைச்சர் வன்சன் பியோன் 15 வாசகம் கொண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

பிரான்சின் அனைத்து ஆரம்ப, நடுத்தர, உயர்தர (primaire, collège, lycée) அரச பாடசாலைகளிலும் 15 வாசகங்களும் அடங்கிய சட்டகம் பாடசாலை பொது இடமொன்றில் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இச்சட்டகத்தை வெளியிட்டு வைத்துப் பேசிய அமைச்சர், குடியரசில் அரசும், மதங்களும் வெவ்வேறானவை என்னும் உண்மையை மாணர்களுக்கு அறிவுறுத்துவது பாடசாலைகளின் கடமை என்றார்.

சில மாணவர்களுக்கு ஒரு La Laïcité புதிய விடயமாகவும், இன்னும் சிலருக்கு தங்கள் மேல் பிரயோகிக்கப்படும் அச்சுறுத்தலாகவும் உணர வாய்ப்புண்டு. ஆனால் இது முற்றிலும் எதிர்மாறான வாதமாகும். மற்றவரை மதித்து தனக்கான சுதந்திரத்தை பிறர் சுதந்திரத்தில் தலையிடாது கட்டியமைக்க La Laïcité அனுமதிக்கிறது. வேறுபாடுகள், வெவ்வேறு மத நம்பிக்கைகள் என வாழும் ஒரு ஜனநாயகச் சமூகம் ஒருவரை ஒருவர் மதிக்காது ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து விட முடியாது. ஆசிரியர்கள் இந்த மிகச் சுருக்கமான அறிக்கையை சரியான முறையில் விரிவாக மாணவர்களுக்கு விளங்கும் வண்ணம் எடுத்துரைக்க கடமைப்பட்டவர்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இவ் அறிக்கை தொடர்பாக கல்வித்துறை பணியாளர்களும், பெற்றோர் அமைப்புகளும் தங்கள் அதிருப்தியை பதிவு செய்துள்ளனர். “இவ் அறிக்கை La Laïcité (மதச்சார்பின்மை) தொடர்பான நடைமுறை செயற்பாட்டு பிரச்சினைகளை பார்க்கத் தவறியுள்ளது என குற்றம் சுமத்தும் அவர்கள், கன்ரின் உணவுப்பட்டியல் விவகாரம் மற்றும் கிறிஸ்மஸ் விடுமுறை போன்ற மதவிடுமுறைக் கொண்டாட்டங் களுக்கான விடுமுறைகள் என உதாரணங்களை அடுக்குகின்றனர். அறிக்கையில் மதச்சார்பான சில பதங்கள் இஸ்லாம் மதத்தைச் சாடுவது போலவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரான்ஸ் வாழ் இஸ்லாமியர்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணர வாய்ப்புக்கள் உள்ளன என பிரான்ஸ் இஸ்லாமிய அமைப்புகள் சார் பிரதிநிதி Dalil Boubakeur தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார். இதனை முற்றிலுமாக நிராகரித்த கல்விஅமைச்சர் “மதச்சார்பின்மை குறிப்பிட்ட ஒரு மதத்திற்கு எதிரானது அல்ல, மாறாக குடியரசின் அனைத்து மக்களையும் சமத்துவமாக ஒரே நோக்கில் பார்க்கிறது” என்ற கருத்தை அழுத்தமாக முன்வைத்தார். மேலும் பிரான்ஸ் குடியரசின் பாடசாலைகள் இஸ்லாமியர், யூதர், புரோட்ஸ்தாந்து, மத நம்பிக்கையற்றவர்கள் என்று பாகுபாடுகளுடன் மாணவர்களை அனுமதிப்பதில்லை. மாறாக அனைவரும் பிரான்ஸ் குடியரசின் மாணவர்கள் என்ற ஒற்றைப் பார்வையிலேயே அனுமதிக்கப்படுகின்றனர் என மேலும் வாதிட்டார்.




நன்றி : தேன்நிலா

## உலகத் தர வரிசையில் பின்தங்கும் பிரான்ஸ் பல்கலைக்கழகங்கள்

உலகப்பல்கலைக்கழகங்களின் தரவரிசை வருடா வருடம் (Ranking de Shanghaï) வெளியிடப்படுகின்றது. இத்தர வரிசை சீனத் தலைநகர் ஷர்காய் Jiao Tong பல்கலைக்கழகத்தால் வெளியிடப்படுகிறது. உலக நாடுகளில் உள்ள அனைத்துப்பல்கலைக்கழகங்களையும் கணக்கில் கொண்டு, அப்பல்கலைக்கழகங்களின் வெற்றி விகிதங்கள், செயற்பாட்டு முறைகள் மற்றும் அவற்றின் மீதான ஆய்வாளர்களின் விமர்சனங்களின் அடிப்படையில் தரவரிசை நடைமுறைப்படுத்தப்படுகிறது. 500 சிறந்த பல்கலைக்கழகங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. 500க்குள் தெரிவாகியுள்ள 20 பிரான்ஸ் பல்கலைக்கழகங்களில் வெறும் 4 பல்கலைக்கழகங்களே முதல் 100க்குள் இடம் பிடித்துள்ளன. அவை பின்வருமாறு :

### Classement des Universités Selon ARWU (2013)

1. Harvard, அமெரிக்கா
2. Stanford, அமெரிக்கா
3. Berkeley, அமெரிக்கா
4. Mit, அமெரிக்கா
5. Cambridge, இங்கிலாந்து

### பிரான்ஸ் பல்கலைக்கழகங்கள்

37. Université Pierre et Marie Curie, Paris VI, (France)
39 Université Paris Sud, Paris XI, (France)
71 École normales supérieure de Paris, (France)
97 Université de Strasbourg (France)


முதல் இருபதில், பதினேழு பல்கலைக்கழகங்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவையாகும். 500 இற்குள் அமெரிக்காவின் 146, இங்கிலாந்தின் 37, ஜேர்மனியின் 37, மற்றும் சீனாவின் 34 பல்கலைக்கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

## பிரான்சில் வருடத்திற்கு பத்தாயிரம் தற்கொலைகள்!

**ஐரோப்பிய அளவில் பிரான்ஸ் நாட்டவர்களே தற்கொலையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையில் முதலிடத்தில் உள்ளனர். வருடத்திற்கு பத்தாயிரம் தற்கொலைகள் பதிவாகியுள்ளது. இது வாகன விபத்துக்களால் இறப்பவர்களின் எண்ணிக்கையை விட 3 மடங்கு அதிகமானதாகும். சுகாதாரத்துறையின் இவ் அறிக்கையின் படி மன அழுத்தமும், பிரயோகிக்கப்படும் வன்முறைகளுமே தற்கொலைக்கு முக்கிய காரணங்களாக அறியப்படுகிறது. இருப்பினும் அதிக அளிவிலான தற்கொலைகளின் சரியான உண்மைகள் அறியப்படாமலேயே கோப்புகள் மூடப்படுகின்றன.**


நன்றி : தேன்நிலா

# இந்த பூமியிலேயே மிகச் சிறந்த பேச்சு




50 வருடங்களுக்குப் பின்னர் கலாநிதி மார்ட்டின் லூதர் கிங்கின் மரபுரிமைப் பண்பை நம்மால் அளவிடக்கூடியதாக உள்ளது. அமெரிக்க அரசியல் வரலாற்றில், சிலவேளை உலக வரலாற்றில் கூட அத்தனை குறுகிய காலத்தில் வேறு யாரும் அவரைப்போல சமூக பொறியியலை அணுகியதில்லை. பலவீனமாகி, தோற்றுப் போயிருந்த ஒரு சமூகத்தை ஒரு நம்பமுடியாத வேகத்தில் வேலெழுப்பியதற்கு அவரே பொறுப்பு இன்று ஒரு கறுப்பின ஜனாதிபதி வருவார் என்று யாராவது நினைத்திருப்பார்களா?

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் மார்ட்டின் லூதர் கிங் வாசிங்டன் டிசி யில் உள்ள லிங்கன் ஞாபகார்த்த மண்டப படிகளில் வைத்து "எனக்கு ஒரு கனவு உள்ளது" எனும் பூமியை அதிர வைக்கும் உரையை நிகழ்த்தினார். அதை யாராவது யு ரியுப் இணையத்தளத்தில் பார்த்து அந்த உரையை கேட்டிருப்பார்களானால் அவர்கள் அசைவே இல்லாமல் மெய்மறந்து போயிருப்பார்கள். நான் அதை ஒரு நூறு தடவைகளுக்கு மேல் கேட்டிருந்தாலும் இன்னமும் அது




என்னை கலக்குகிறது அவரது கனவு என்னவென்றால் "ஒரு நாள் அவரது பிள்ளைகள் அவர்களது தோலின் நிறத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படாமல் அவர்களது குணாதிசயத்தின் உள்ளடக்கத்தை கொண்டு மதிப்பிடப்படுவதுதான்" அவரது அனைத்து பேச்சுக்களிலும் உள்ள சிறந்த வரிகளில் இதுவும் ஒன்று அமெரிக்காவின் தெற்குப் பகுதி "அநீதியின் வெப்பம் தாங்காமல் வியர்த்துக் கொட்டுகிறது. அடக்குமுறையின் வெப்பத்தால் புழுங்குகிறது" என்று அவர் சொன்னார்.

அடிமைகள் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களுக்குள்ளேயே, தென்பகுதி வெள்ளையின ஜனநாயகவாதிகள், கறுப்பின குடிமக்கள் புதிதாக வென்றெடுத்த அரசியல் உரிமைகளை பறிக்கத்தக்க வகையில் மாநில அரசியலமைப்பை நிறுவினார்கள். குளு கிளக்ஸ் கிளான் போன்ற பயங்கரவாதக் குழுக்கள் கறுப்பர்களின் பாடசாலைகள், மற்றும் தேவாலயங்களை தகர்த்ததுடன் விருப்பத்துடன் கொலையும் செய்தார்கள். கலாநிதி மார்ட்டின் லூதர் கிங் இந்த உரையை ஆற்றும் சமயத்திலும்கூட அவர்கள் அதை செய்து கொண்டுதான் இருந்தார்கள். அவரது பேச்சு நடந்து மூன்று வாரங்களின் பின்னர் கிளன்ஸ் நபர்கள் பர்மிங்காமில் உள்ள ஒரு பப்ரிஸ் தேவாலயத்துக்கு குண்டு வீசினார்கள், அல்அபாமாவினர் நான்கு சிறுமிகளைக் கொன்றார்கள்.

வாசிங்டனை நோக்கி அணிவகுப்பு நடந்த சமயம் நான் ஆபிரிக்காவில் இருந்தேன். ஆனால் அடுத்த பெரிய நிகழ்வான 1965ல் நடைபெற்ற குடியியல் உரிமை இயக்கத்தின்போது நான் செல்மாவில் இருந்தேன் அங்கு மார்ட்டின் லூதர் கிங், அந்த ஒதுக்கப்பட்ட நகரத்தில் இருந்து – அங்கு ஒரு கோப்பை காப்பி அருந்துவதற்குக்கூட கறுப்பர்கள் வெள்ளையர்களுடன் காப்பி கடையில் சேர்ந்திருக்க முடியாத நிலை இருந்தது – மாநில தலைநகரான மொண்ட்கோமரி நோக்கி அணிவகுப்பை வழி நடத்தினார். முதலில் அணிவகுப்பு நடத்திய நூற்றுக் கணக்கானவர்களை காவல்துறையினர் கண்ணீர் புகை பாய்ச்சி, மோசமாக அடித்து, கீழே



தள்ளி, கால்நடைகளை அடிக்கும் தார்க்குச்சியால் குத்தியதன் பின்னர், பதினாயிரக்கணக்கானவர்கள் அமெரிக்காவின் நான்கு மூலைகளிலிருந்தும் அந்த அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காக வெள்ளம் போலத் திரண்டு வந்தனர். திரும்பவும் கலாநிதி கிங் பேசினார். திரும்பவும் அமெரிக்கா அதிர்ந்தது. ஒரு வாரத்துக்குள்ளேயே ஜனாதிபதி லிண்டன் ஜோண்சன், தான் காங்கிரசுக்கு ஒரு மசோதாவை அனுப்புவதாகவும் அது கறுப்பினமக்களுக்கு வாக்களிப்பதற்குள்ள அனைத்து தடைகளையும் நீக்கும் என்று அறிவித்தார்.


இதே ஜனாதிபதி லிண்டன் ஜோண்சன் அவர்கள்தான் மிருகத்தனமான வியட்நாம் போருக்குள் அமெரிக்காவை சிக்க வைத்தவர். அவர் காங்கிரசி னூடாக இந்த மசோதாவை கொண்டுவந்தார். அதற்கு முன், உணவு விடுதிகள் மதுபானச்சாலைகள், பொது இருக்கை, கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்கள் போன்றவற்றில் காண்பிக்கப்படும் பாகுபாடுகளை சட்ட விரோதமாக்கியதன் மூலம் குடியியல் உரிமை சட்டத்துடன் அது மோதலை ஏற்படுத்தியது.

இது புரட்சி, ஆனால் அதன்பின், ஊடகங்கள் கிட்டத்தட்ட கலாநிதி மார்ட்டின் லூதர் கிங் இன் மீதான ஆர்வத்தை தொலைத்து விட்டன என்பதை நாங்கள் மறந்துவிடலாகாது. அவர் தனது பிரச்சாரத்தை தெற்கிலிருந்து சிக்காக்கோவுக்கு நகர்த்தியபோது நான் அவருக்காக பணியாற்றினேன். அங்கு கறுப்பர்கள் நீண்ட காலமாக வாக்குரிமையை பெற்றிருந்தாலும், அவர்கள் இன்னமும் பெரும்பான்மையான யூதர்கள் வாழும் சேரிகளிலேயே வாழ்ந்தார்கள். பின்தங்கிய பாடசாலைகளுக்கே சென்றார்கள் மற்றும் அவர்களது ஒரே குறிப்பிடத்தக்க நடுத்தர வர்க்கமாக இருந்தவர்கள் பாதிரியார்களும் மற்றும் போதகர்களும் மட்டுமே ஒரு தலைமுறைக்குப் பின்னர் பரக் ஒபாமா செய்த அதே வேலையைத்தான் அந்த சேரிகளில் அன்று நாங்கள் செய்தோம் – குடியிருப்பாளர்களை அவர்களின் வீட்டுடமைகளை எதிர்ப்பதற்கு ஏற்பாடு செய்வது, மோசமான கும்பல்களை அவர்களின் ஆயுதங்களை கீழே போடுவதற்கு இணங்க வைத்து, கறுப்பர்கள் குடியேறாமல் தடுத்துவரும் வீட்டு உரிமையாளர்களை அவர்களின் வெள்ளை இன அயலவர் வசிக்கும் பகுதிகளை நோக்கி அணிவகுக்க வைப்பது போன்ற வேலைகள். நாங்கள் சில முன்னேற்றங்களை பெற்றாலும் தெற்கு உடைந்தது போலில்லாமல் வடக்கை உடைக்க முடியாத அளவுக்கு கடினமாக இருந்தது. சேரிப் பகுதிக்கு அருகில் அமைந்திருந்த கலாநிதி மார்ட்டின் லூதர் கிங் இனது சிறிய குடியிருப்பில் அவருடன் சேர்ந்து ஊழியர் கூட்டங்களில் கலந்து கொண்டது எனக்கு நினைவில் உள்ளது அப்போது விரக்தியுற்ற நாங்கள் உடைக்க முடியாத அந்த கடினமான வடக்கை உடைப்பதற்கு ஒரு பலமான வழியை தேடினோம்.

அப்போது நேசன் பத்திரிகை கலாநிதி கிங்கை புறக்கணிக்காமல், அவர் தனது பிடியை நழுவ விட்டுள்ளார் என எழுதி அவரை கடினமாக விமர்சித்தது. அவர்கள் கவனம் யாவும் கடினமான பாதையை அதுவும் வன்முறையை வாதிக்கும் மல்கம் எக்ஸ், ஸ்ரொக்லி கார்மைக்கல் மற்றும் ஆயுதம் தாங்கிய கறுப்பு சிறுத்தைகள் என்பனவற்றின் பக்கம் திரும்பியிருந்தது. வன்முறை அற்ற தன்மையை காட்டிலும் இது சிறந்த பிரதியாக இருந்தது. பின்னர் கலாநிதி மார்ட்டின் லூதர் கிங் வியட்நாம் போரை எதிர்த்தபோது, நியுயோர்க் டைம்சின் ஆசிரியத் தலையங்கத்தில் குடியியல் உரிமைகளையும் மற்றும் போர் எதிர்ப்பு இயக்கங்களையும் கலக்க கூடாது என்று எழுதியது (அதற்கு "நான் அதை கலக்கவில்லை, போர்தான் அதைக் கலந்தது" என்று கலாநிதி கிங் பதிலளித்திருந்தார்) வெள்ளையின தாராண்மைவாதிகள்கூட அவரை ஒதுக்கினார்கள் – அமெரிக்காவின் வெள்ளையர் ஆதிக்க அரசியலின் குரூரம் அது, இப்போது அது வசதிக்கேற்ப மறைக்கப்பட்டு மூடி மறைக்கப்பட்டு விட்டது.

ஆனால் 50 வருடங்களுக்குப் பின்னர் கலாநிதி மார்ட்டின் லூதர் கிங்கின் மரபுரிமைப் பண்பை நம்மால் அளவிடக்கூடியதாக உள்ளது. அமெரிக்க அரசியல் வரலாற்றில், சிலவேளை உலக வரலாற்றில் கூட அத்தனை குறுகிய காலத்தில் வேறு யாரும் அவரைப்போல சமூக பொறியியலை அணுகியதில்லை. பலவீனமாகி, தோற்றுப் போயிருந்த ஒரு சமூகத்தை ஒரு நம்பமுடியாத வேகத்தில் மேலெழுப்பியதற்கு அவரே பொறுப்பு இன்று ஒரு கறுப்பின ஜனாதிபதி வருவார் யாராவது நினைத்திருப்பார்களா?

கறுப்பர்களின் வாழ்க்கைத் தரத்தை வெகு ஆழமாக மாற்றமுடியும் என்று யார் நினைத்தார்கள்? 1959ல் 55 விகிதமான கறுப்பர்கள் வறுமையில் வாழ்ந்தார்கள். மற்றும் 4.5 விகிதமான கறுப்பின இளைஞர்களே கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்றார்கள். 2010ல் 36 விகிதமான கறுப்பர்கள் பல்கலைக்கழகத்துக்கு சென்றுள்ளார்கள். மற்றும் பெரும்பாலான கறுப்பினத்தவர்கள் ஏழைகள் அல்ல. பிரதிநிதிகள் சபையில் உள்ள பத்தில் ஒருவர்



கறுப்பினத்தவர் கறுப்பினத்தவர்கள் உலகத்தின் பிரதானமான நிறுவனங்களின் முதலாளிமாராக மாறியுள்ளதுடன், கல்வியுலகம், வர்த்தகம், வங்கியியல், மற்றும் இராணுவம் போன்றவற்றில் அரசாங்கத்தின் அதி உயர் பதவிகளையும் அலங்கரிக்கிறார்கள். நடுத்தர வர்க்கம் காளான்களைப்போல முளைத்துள்ளன. கறுப்பினத்தவர்கள் அளவுக்கதிமான சுய நம்பிக்கை மற்றும் சுய மரியாதை உடையவர்களாகத் திகழ்கிறார்கள்.

இன்னும் என்ன தவறு உள்ளது மற்றும் மொத்தத்தில் நியாயமற்றது எது என்பதைக் கூறுவதற்கு ஒரு பக்கம் நீளமான பட்டியல் உள்ளது. ஆனால் கறுப்பர்களின் முன்னேற்றத் தொடர்ந்து அதன் நிலையத்தைவிட்டு வெகு காலத்துக்கு முன்பே புறப்பட்டு விட்டது – மற்றும் அது இன்னமும் வேகம் பிடித்துக் கொண்டேயிருக்கிறது அந்தப் பேச்சைக் கேளுங்கள்.

**- ஜோநாதன் பவர்**

# மனம்பெரி தொடக்கம் - இசைப்பிரியா வரை கருணையற்ற மனோநிலை

ஊடக - உலக தேவைகள் நலன்களுக்கப்பால் சனல் - 4 இல் இசைப்பிரியா இழுத்துச் செல்லப்படும் காட்சி எம்மை அமைதியிழக்கச்செய்கிறது. நிராதர வான பயங்கரமான குரூரமான தனிமையான அவலமானது அந்தச் சூழல்.

சேறும் இரத்தமுமாக வக்கிரமிருகவெறியுடன் துப்பாக்கி முனையில் ஒரு பெண்ணை இழுத்து வரும் மரணத்தை நோக்கிய அவலமான பயணம். நாம் மனிதரெனக் கொண்டிங்கு வாழும் போது இசைப்பிரியாவின் நிலை, தவிப்பு, கையறு நிலை இதனைப்பார்க்கும் போது வெட்கமாகவும் அவமானமாகவும் இருக்கிறது.

இசைப்பிரியாவின் துயரம் ஒரு கைத்தொலை பேசியில் பிடிக்கப்பட்டதால் அதிர்ச்சியில் உறைய வைக்கிறது. இதேபோன்று ஒளிப்பதிவுசெய்யப்படாத நிழல்படங்களாக்கப்படாத எத்தனையோ அநியா யங்கள் அக்கிரமங்கள் நிகழ்ந்திருக்கின்றன. நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

இவை பற்றி விசாரிக்கப்படாவிட்டால் தண்டனை வழங்கப்படாவிட்டால் இது இலங்கையின் கண்ணிய மான பெருவாரியான மக்களின் வாழ்க்கை நெறி முறைகளை இகழ்வதாக அமையும். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக தொடர்ச்சியான உண்மை களைக் கண்டறியும் செயற்பாடுகள் அவசியம். ஏற்கனவே கண்டறியப்பட்டவற்றுக்கு நடவடிக்கை வேண்டும்.

இதனை எதிர்மறையாக நோக்கத் தேவையில்லை. இலங்கையின் வாழ்வை செம்மையுற வைப்பதற்கு ஓயாத விழிப்புணர்வு வேண்டும். வெறுமனே ஒரு சில மிருகங்களின் செயற்பாடென்று எடுத்து விட முடியாது. நிறுவன ரீதியான காட்டுமிராண்டி சுதந்திரத்தில் இருந்தே இது நிகழ்ந்திருக்கிறது.

மனிதர்கள் என்ற அடையாளத்தையும் தார்மீக விழுமியங்களையும் அறங்களையும் அழிப்பது மனித குலவிரோதிகள் செய்யக் கூடிய காரியங்களே. இங்கு இறைமை என்ற சொல் அர்த்தம் இழந்து போகிறது. இறையாண்மை என்பது மக்களின் நம்பிக்கைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்டது.

இது ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. ஒரு சமூகம் பற்றிய குரூரமான வெறுப்பின் வெளிப்பாடு. மானிட அறத்தின் பாற்பட்ட பகுத்தறிவு - பொதுப்புத்தி என்ன சொல்கிறது என்பதுதான் முக்கியம். உலகவரலாறு வரட்டு எழுத்துருக்களில் இருந்து வரவில்லை. இரத்தமும் சகதியுமான மனித வாழ்விலிருந்து வருவது.

இசைப்பிரியாவிற்கு நேர்ந்தது போன்ற அவலங்களை புலிகள் நிகழ்த்தவில்லை என்றும் இல்லை. தெரிந்ததும் தெரியாததுமான சம்பவங்கள் கணக்கற்றவை. இரத்தம் தோய்ந்தவை. எல்லாம் ஒளிப்படங்களாக வரவில்லை. சொந்த சமூகம் மாத்திரமல்ல சக சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் குழந்தைகளும் குரூரமாக கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் எந்த உலக சட்டத்திட்டங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல என்றவாதமும் சரியான தல்ல. இசைப்பிரியாவிற்கு நிகழ்ந்த கொடூரத்திற்கு மேலாதிக்கவெறி அதிகார அகங்காரம் பிரதான காரணமாக இருந்தது. சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது நலிவுற்றவர்கள் மீது எத்தகைய காட்டுமிராண்டித்தனத்தையும் நாம் பிரயோகிக்கமுடியும் அதற்கு பாதுகாப்பிருக்கிறது என்ற அந்த உணர்வு நிலை ஆபத்தானது.

இது போன்ற இதற்கு நிகரான நிலை மறுதரப்பிலும் காணப்பட்டது. மாற்று இயக்கங்களில் சம்பந்தப்பட்ட, மாற்றுக் கருத்துடைய பெண்களை, சொந்தமெனச் சொல்லும் மக்களை என்ன செய்தார்கள் என்பதும் அதிர்ச்சி ஏற்படுத்துவது.

இங்கு ஒப்பீடுசெய்ய வரவில்லை. காட்டு மிராண்டித்தனங்கள் எல்லாப் பக்கங்களிலும் கோலோச்சியிருக்கிறது.

நாளாந்தம் எவ்வளவு குரூரமான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. முள்ளிவாய்கால் வரை ஒரு மக்கள் கூட்டத்தை பலாத்காரமாக அழைத்துச் சென்றவர்களும் இதற்கு பொறுப்பு சொல்லவேண்டும்.

சமூகப் பொறுப்புணர்ச்சி, தமது உறுப்பினர்கள் - மக்கள் மீது கருணையும் அன்பும் உள்ளவர்கள் இத்தகைய காரியத்தைச செய்ய மாட்டார்கள். இசைப்பிரியாவின் இறுதி நாள் அவலமும், கையறு நிலையும், கல்வாரிப்பயணமும்

முள்ளிவாய்கால்வரை மக்களை வழி நடத்தியவர்களின் காட்டிக்கொடுப்புமாகும். சமூகப் பொறுப்புணர்வுள்ளவர்கள் மக்கள் மீது அக்கறை யுள்ளவர்கள் இந்த காரியத்தை செய்யமாட்டார்கள். ஒரு சிறிய இடத்தில் மக்கள் அடைபட நிர்ப்பந்தித்தவர்களும் பல்லாயிரக்கணக்கான மக்களின், போராட்டக்காரர்களின் மரணங் களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்கள்.

இசைப்பிரியாவினதும், கடந்த 30 வருடங் களாக குரூரமாகவும் அவலமாகவும் கொல்லப் பட்ட பலநூற்றுக்கணக்கான பெண்களினதும் மரணங்களுக்கு அரசு மாத்திரமல்ல, ஜனநாயக விரோத தமிழ் பாசிசத்திற்கு ஆதரவழித்து நின்ற சமூகமும் பதில் சொல்லவேண்டும்.

1971 கிளர்ச்சி தோற்கடிக்கப்படும்போது மனம்பெரி என்ற கதிர்காமத்து அழகுராணிக்கும் குரூர மரணம் விளைவிக்கப்பட்டது. ஆயுதம் தாங்கிய அதிகாரம் காட்டுமிராண்டி நிலைக்கு மனிதனை பல சந்தர்ப்பங்களில் அழைத்துச் சென்றிருக்கிறது.

1994 இல் ருவண்டாவின் பல்லாயிரக் கணக்கான டுட்சி இனப்பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கும் படுகொலைக்கும் உள்ளானார்கள். ஆப்கானில் தலிபான்கள் பெண்களுக்கெதிரான பாசிச வன்முறைகளைத் தொடர்ந்து கொண்டிருக் கிறார்கள் யாழ்ப்பாணத்தில் சில நாட்களுக்கு முன் லோகராணி என்ற பெண் பாலியல் பலாத்கார படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு காங்கேசன்துறை வீதி நாச்சிமார் அம்மன் எனும் பெண்தெய்வத்தின் தேர் முட்டியில் சடலமாக வீசப்பட்டு கிடந்ததெல்லாம் பெரிய அதிர்ச்சிகளை ஏற்படுத்தாத அன்றாடச் செய்தியாகியது. இத்தகைய மனோநிலை ஆபத்தானது.

எங்கிருந்து எந்த மன நிலையிலிருந்து இந்த வன்முறைகள் எழுகின்றன? இத்தகைய வன் முறைகளுக்கு நாம் பொறுப்பில்லையா என்பதைச் சிந்திக்கவேண்டும். இந்த குரூரம் யுத்தத்திற்கு பின்னரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது.

நாம் எம்மை சுயபரிசோதனைக்குட்படுத்துவது முதன்மையானது. எம்மை சுயவிமரிசனத் திற்குள்ளாக்க வேண்டும். உண்மையை நீதி நியாயத்தை தரிசிப்பதற்கு இது மிக மிக அவசியம். நாடு முழுமையாக ஜனநாயக மயப்படுத்தப்படவேண்டிய தருணமிது. கண்ணிய மான சுயமரியாதையுடனான வாழ்வொன்றை கட்டியெழுப்ப முனைவோம் .

சுகு-ஸ்ரீதரன்

# தமிழ் (இந்த உலகின் பழமையான மொழி தமிழ்)

பிற இன மக்கள் பேச மொழியே தோன்றாத போது இங்கே நாம் இலக்கியங்கள் படைத்தோம்! இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட "நன்னூல்" எனும் நூலில் தமிழ் எழுத்துக்கள் உடலில் எந்தெந்த இடங்களில் பிறக்கின்றன, பிறந்த எழுத்துக்களை ஒலிக்க எந்த உறுப்புகள் துணை புரிகின்றன, துணை புரியும் உறுப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை படித்து அதிர்ச்சி அடைந்தேன்!!! தமிழின் பெருமையும் அழகும்-தமிழ். இலக்கியங்கள்- திருக்குறள், அபிராமி அந்தாதி, தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, திவ்ய பிரபந்தம், திருப்பாவை, ஆண்டாள் பாசுரம், வெண்பா என பல செல்வங்கள் நம்மிடம் உள்ளன. இந்த அற்புத வரிகளில் அருமையாக வெளிப்படுகிறது. அவற்றைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமை.

ஓர் பூசணிக்காயை உடைக்காமலே அதில் எத்தனை விதை இருக்கிறது என்பதை உங்களால் கூற முடியுமா? முடியும் என்கிறது நம் தமிழ் செய்யுள்.

உலகின் பல இனங்கள் காட்டில் வேட்டையாடி உண்ட போது இங்கே நாம் மெசொபோத்தேமியாவில் இருந்து தமிழீழம் வரை கல்லணையை கட்டி கொண்டு செய்ததே விவசாயம்..

பலருக்கு நிலத்தில் மட்டுமே போர்புரிய தெரிந்த காலத்தில், உள்நாட்டை ஆட்சி புரிந்தும், வெளிநாட்டை ஆட்சி புரியும் ஒரு வல்லரசின் ஆட்சி, ஆட்சி மொழியாகவும் தமிழ் இருந்திருக்கின்றது என்பது தெரியவருகிறது - இங்கே நிகரற்ற ஒரு கப்பற்படையை வைத்திருந்தோம்!

உலகில் முதல் கப்பலும் கப்பல் படையும் தமிழருடையதே உலகில் கப்பல் கண்டு பிடித்தவன் தமிழன். உலகின் கப்பல் கட்டுமானத்தில் சிறந்து விளங்கியவன் தமிழன். இத்துறை வல்லுனர்கள் கம்மியர்கள் எனப்பட்டனர்.

முதல் கப்பல் படையை நிறுவி, தன் மகன் தெற்காசியா வரை சோழ கொடியை நாட்ட வழிவகுத்த ராஜ ராஜா சோழனின் கப்பல் படை.

இராசேந்திர சோழன் மேலும் முன்னேறி இந்தோனேசியா அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், இலட்சத்தீவுகள், சுமத்ரா, ஜாவா, மலேயா மற்றும் பெகு தீவுகளையும் தன் கப்பற்படையைக் கொண்டு கைப்பற்றினான். அத்துடன் தற்போதைய பீகார் மற்றும் வங்காளப் பகுதிகளை ஆண்டு வந்த மகிபாலனையும் வீழ்த்தினான். தன் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கங்கை கொண்ட சோழபுரம் எனும் தலைநகரை உருவாக்கினான்.

பல மன்னர்கள் அடுத்த பகுதியை வெற்றி கொண்டு சாதனை எடுத்து கூறிய போது, தெற்காசியா முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் வைத்து ஆண்ட தமிழர்கள். தமிழ்நாட்டின் பலம் மிக்க அரச வம்சங்களில் ஒன்றாகப் பாண்டியர் விளங்கினர். 14ஆம் நூற்றாண்டில் தோற்கடிக்கப்பட்ட பாண்டியர்கள், பின் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு 1650ஆம் ஆண்டு வரை ஆண்டதற்கு சான்றுகள் உள்ளன. அவர்களை "தென்காசிப் பாண்டியர்கள்" என்று கூறுவர்.

இந்த செய்தி இப்பொழுது வரை "தென்காசிப் பாண்டியர்கள்" பற்றி வெளியில் வரக்கூட இல்லை... எல்லாம் நம் வரலாற்றை அழிக்க நினைத்தவர்கள் செய்த சதி...பெரும்பான்மையான மக்களுக்கு இந்த வரலாறு தெரியவே தெரியாது.

இன்றைய கேரளாவும் மலபாரை ஒட்டிய பகுதிகளும் சேர நாட்டின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.கடலை ஒட்டியிருந்த சேரர்களின் ஆட்சிப்பகுதி ரோமானியர்களுடனான வாணிபத்திற்கு ஏதுவாக இருந்தது. ஆங்கிலேய படையெடுப்பு நிகழும் வரை சேரர்களின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்த சிறிய நிலப்பகுதி பெரும்பாலும் வேறெவருடைய படையெடுப்பிற்கும் ஆளாகாமல் இருந்தது.--தமிழா நம் முன்னோர்கள் சாதித்தார்கள்.

. அழித்தொழிக்கப்பட்ட மாயன் கூட்டம் தமிழர்கள் "நுண்வினைக் கம்மியர் காணா மரபின் துயர் நீங்கு சிறப்பின் அவர் தொல்லோர் உதவிக்கு மயன் விதித்துக் கொடுத்த மரபின" "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளி" [-சிலப்பதிகாரம்-] மாயனின் வரலாறு கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகியிருக்கிறது என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனாலும் கி.மு.2000 முதல் கி.பி.900 ஆண்டுகள் வரை உள்ள காலப் பகுதிகளில்தான் மாயன்களின் நாகரீகம் உச்சத்தை அடைந்திருந்தது 3500 ஆண்டுகள் வாழ்ந்த இந்த இனமானது கடந்த 15-ம் நூற்றாண்டில் அழிந்தது. இந்த இனத்தினர் விஞ்ஞானிகளைவிடவும் புத்திசாலியாக வாழ்ந்ததாக சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. மாயன் இனத்தவர் கட்டிடக் கலை, வான சாஸ்திரம், ஜோதிடம், கணித சூத்திரம் போன்ற அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சி பெற்ற வித்தகர்களாக இருந்தனர்.மாயன் கூட்டம் தமிழர்கள்- -தமிழா நம் முன்னோர்கள் சாதித்தார்கள்.

அழித்தொழிக்கப்பட்ட தமிழீழ தமிழர்கள் கூட்டம் தமிழீழ அரசாங்கம் முப்படை வீரர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்தும் எமது அபிலாசைகள் நிறைவேறாமைக்குத் தற்குறைவாக. அமைந்தது சிவப் பலமே.

சில போர்களால் தமிழறின் வரலாறே மாறியுள்ளது. இழந்த இன அடையாளத்தினை மீளத் தேடும் கறேபியன் தீவுத் தமிழர்கள் கூட்டம் அங்கே பிற இனமக்கள் பொருள் அறியா பெயர்களை சூட்டினர். இங்கே நாம் தூய சைவதமிழ் இலக்கிய பெயர்களை சூட்டி மகிழ்ந்தோம். ஆனால் எமது தற்போதைய தலைமுறையினர் தம்மை யாரென்று அடையாளங்காட்ட முடியாத பெயர்களை நாம் இடுவது மிகப்பெரிய இழுக்காகும். (வெள்ளைக் காரன்தான் உனக்கு அப்பனா? அன்னை யார்?) தம்மினத்தின் சிறப்பறியாது தம்மைத்தாமே சிறப்புறச் செய்வதாக எண்ணித் தாழ்த்தும் பகுத்தறிவு தமிழரை நினைத்து வேதனை கொள்ளாதிருக்கவும் முடியவில்லை. உன் மொழியை அடகு வைத்து வேறு மொழியில் பெயர் வைக்காதே. துய சைவதமிழில் பெயர் வைப்பது மட்டுமல்லாமல் தங்கள் உறவினர்கள், நண்பர்களையும் தமிழ் பெயர்களை வைக்க உதவுங்கள்.




**தமிழ் அவமானம் அல்ல 'அடையாளம்'**

# இழந்த அடையாளத்தினை எழுதப்பட்ட வரலாறு

தமிழ் மக்கள் தோன்றிய காலத்தைக் குறிப்பிடும் பொழுது "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து வாளாடு முந்தோன்றிய மூத்தக் குடியினர்" எனக் கூறப்படுகிறது. இது கற்பாறைகள் தோன்றிய காலத்திற்குப் பின்னும், அது மழை பெய்து, பெய்து கரைந்து மணலாகத் தோன்றிய காலத்திற்கு முன்னும் உள்ள காலத்தைக் குறிப்பிடுவதாகும். இத்தகைய மக்கள் பேசிய மொழியே தமிழ்மொழியாகும்.

தமிழர் நாகரிகமும் 9.500 ஆண்டுகள் பழமைமிக்க எதியோபிய நாகரிகத்தினும் மேலாக... எதியோபிய நாகரிகம் சூடான் - எதியோபியாவின் வட பகுதியில் நைல் ஆற்றுக் கரை ஓரம் தோன்றி வளர்ந்தது. இந் நாகரிகம் எகிப்து நாகரிகத்தினும் பழமை மிக்கது என்றும் உண்மையில் எதியோபிய நாகரிகரே எகிப்து நாகரிகத்தையும் அமைத்ததாக சொல்லப்படுகிறது. ஆயினும் மேலையர் எகிப்தையே பெருமைப்பட பேசுகின்றனர். உலகில் பலருக்கு எதியோபியாவில் பழம் நாகரிகம் இருந்ததே அறியாமல் உள்ளனர். எதியோபிய நாகரிகம் காலத்தால் எகிப்தினும் முற்பட்டது, அதாவது, 9,500 ஆண்டுகள் பழமையுடையதாய் சொல்லப்படுகிறது. இங்கு சிந்து எழுத்துகளை ஒத்த எழுத்துகள் மண்டி எனும் ஊரில் கண்டெடுக்கப்பட்டன. இதற்கு பிற்பட்டதே எகிப்தின் எழுத்துகள். நாகரிகத்தில் எதியோபியா எகிப்துக்கு சற்றும் குறைவில்லாதது. எதியோபிய நாகரிக மன்னர் பெயர்களைக் காணும் போது இவர்களுடைய முன்னோர் தமிழராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தை தோற்றுவிக்கிறது. இந்நாகரிக மன்னர் பெயர்களில் சேரர் பெயர்கள் இடம்பெறுவது சேரம் ஆட்சி ஓர் காலத்தே இங்கு வழங்கி இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. தமிழோடு ஒத்துள்ள இந்நாகரிக மன்னர் பெயர்களை சிந்துவெளி முத்திரைப் பெயர்களோடும், சங்க இலக்கியப் பெயர்களோடும், பிற நாகரிக மன்னர்தம் தமிழ்ப் பெயரோடும் ஒப்பிட்டு ஆய்கிறது இக்கட்டுரை. இந் நாகரிக மன்னர் பெயர் ஒப்பீடு இந்நாகரிகங்களின் மக்கள் ஒரு குலைக்காய் போல் ஒரு மூல நாகரிகத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். அதோடு அம்மூல தாய் நாகரிகம் தமிழர் உடையது என்று விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இவ்வுலகில் எழுத்துகள் சற்றொப்ப 6.500 ஆண்டுகள் அளவில் தோன்றின அதற்கு முன் எழுத்துகள் கிடையா. தமிழின் காலம் கல்வெட்டு, சங்க இலக்கியச் சான்றுகளின் படி 2,500 ஆண்டுகள் பழமையதாக சொல்லப்படுகின்றது.

எதியோபிய மன்னர்தம் தமிழ்ப் பெயர்கள் 6,500 ஆண்டுகள் பழமை மிக்கதால் தமிழின் பழமையை 6,500 ஆண்டுகளுக்கு முன் போடலாம். அதோடு எதியோபியாவில் கிடைத்த மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளை முழுதும் ஒத்துள்ளதால் தமிழும் தமிழர் நாகரிகமும் 9.500 ஆண்டுகள் பழமைமிக்க எதியோபிய நாகரிகத்தினும் மேலாக, அதாவது, 10,000 ஆண்டுகள் தொன்மையதாய் கொள்ளலாம்.

இப்பெயராய்வு எதியோப்பிய மன்னர் Tafari Mokonnen 1922 இல் வெளியிட்ட மன்னர் பெயர் பட்டியலை அடிப்படையாகக் கொள்கிறது.

ஓரிப் பழங்குடியில் மொத்தம் 21 பேர் ஆண்டுள்ளனர். முதலாமவர் Orioraram 4530-4470BC - தமிழில் ஓரி என்பது செப்பமான வடிவம். கடைஎழு வள்ளல்களுல் ஒருவனாக சங்க இலக்கியத்தில் குறிக்கப்படுபவன் வல் வில் ஓரி என்பான். எனவே ஓரி எனும் பெயர் 6,500 ஆண்டுகள் பழமையது. Gariak 4470-4404 BC தமிழில் காரி அக் காரி அக்கன் என செப்பமாக படிக்கலாம். சங்க இலக்கியத்தில் கடைஎழு வள்ளல்களுள் ஒருவனாக குறிக்கப்படுபவன் மலையமான் திருமுடிக் காரி என்பான். இப்பெயர் கொரிய நாகரிகத்தில் Dangun வழிமரபில் ஒரு மன்னனுக்கு Gareuk 2182-2137 BC என இடப்பட்டுள்ளது. தமிழில் காரி அக் காரி அக்கன் என செப்பமாக படிக்கலாம். அக்கன் - வடலூர் வட்ட மருங்கூரில் கிடைத்த பிராமி எழுத்து பொறித்த பானைஓட்டில் அதியகன் என்று உள்ளது. இதை அத்தி + அக்கன் என பிரித்து படிக்க வேண்டும். அப் பிற நாகரிகங்களில் அல், ஐ, இ, உ, அம் ஈறு பெற்றும் வரும். தெலுங்கில் அக்கராஜ என்ற வழக்குள்ளது. எகிப்து நாகரிகத்தில் 4, 7 & 8 ஆம் ஆள்குடிகளில் காரி என பெயர் கொண்டோர் பலர்.

Seral (Tomai) 956 - 930 BC - தமிழில் சேர (தாமை) , சேரன் (தாமன்) என செப்பமாக படிக்கலாம். தாமன் ஐகார ஈறு பெற்றுள்ளது. அல் ஈறு பெற்றும் வழங்கும். தாமல் காஞ்சி மாவட்டத்தில் உள்ள ஓர் ஏரி. சேரன் சேரர்க்கான குடிப்பெயர். பாபிலோன் மன்னன் ஒருவன் பெயர் Tiglath Pileser 732 -729 BC - தமிழில் திகழ் ஆத் வில்லி சேர் , திகழ் ஆதன் வில்லி சேரன் என செப்பமாக படிக்கலாம். நெடுஞ் சேரல் ஆதன் ஒரு புகழ் மிக்க சேர மன்னன். சேரர் வில்லவர் எனப்பட்டதுடன் அவர் கொடிச் சின்னமும் வில். இப்பெயர் சேரர் பாபிலோனையும் ஆண்டதற்கு ஒரு சான்று. Nicauta Kandae(queen) 740 - 730 BC - தமிழில் அரசி நய் காத்த கந்தை எனபது செப்பமான வடிவம். நய்யன் காத்தன் கந்தன் சிந்துவெளி முத்திரைகளில் பயில்வுறுகிறது. கந்தை பெண் பாலை தெளிவாக குறித்து வந்துள்ளது. Erda Amen Awseya 681 - 675 BC - தமிழில் எருத ஆமன் அவ் சேய, எருதன் ஆமன் அவ்வன் சேயன் என செப்பமாக படிக்கலாம். எருதன்- எருதின் வலிமையை ஆணின் வலிமைக்கு ஒப்பிட்டு இடும் பெயர். காளை என்ற பெயர் இதற்கு சான்று. சீனத்தின் தெற்கு Nan Liang அரசின் ஓர் அரசன் பெயர் Tufa Rutan 402 - 414 AD - தமிழில் தூ வா எருதன், தூவான் எருதன் என செப்பமாக படிக்கலாம். தூவாக்குடி தமிழக ஊர். சேயன் - கொரிய நாகரிகத்தில் புதைய வழிவந்த மன்னன் பெயர் Seon hye 925 -898 BC தமிழில் சேயன் கயி என்பது செப்பமான வடிவம். கயி சிந்து வெளியில் கா, என பயில்வுற்றுள்ளது. அவ்வன் - தேனி வட்டம் புலிமான்கோம்பையில் கிட்டிய நடு கல் பிராமி கல்வெட்டில் வேள் ஊர் அவ்வன் பதவன் என்று பொறிக்கப்பட்டு உள்ளது.

Gasiyo Eskikatir - தமிழில் காத்தய்ய இசக்கி கதிர் , காத்தய்யன் இசக்கி கதிர் என செப்பமாக படிக்கலாம். ககரம் கடுஒலி பெற்றுள்ளது. தகரம்சகர இன ஒலி ஸ கரமாக தரிந்தது. காத்தவராயன் இன்றும் வழங்கும் பெயர். இசக்கியம்மன், இசக்கிமுத்து ஆகிய பெயர்கள் தமிழகத்தில் வழங்குகின்றன. பாபிலோன் மன்னன் ஒருவன் பெயர் Ishki bal 1732 BC - தமிழில் இசக்கி பால் . இயக்கி வால் என செப்பமாக படிக்கலாம். வால் - ஒளிரும் வெண்மை எனப் பொருள், வ,ப திரிபால் பால் என வழங்கும். பால் - வெண்மைப் கருத்து வேர். கதிர்- கதிரேசன் என தமிழகத்தில் வழங்குகிறது. ஈலம் நாகரிகத்தில் ஒரு மன்னன் பெயர் Kutir Nahhunte 1740 BC - தமிழில் கதிர் நக்கந்தி , கதிர் நக்கன் கந்தி என செப்பமாக படிக்கலாம். நக்கன் சிந்து முத்திரைப் பெயர். கந்தன், கந்தி ஆகும்.

Tomadyan Piyankhi III 671 - 659 BC - தமிழில் தாம் அதியன் பய்யங்கி, தாமன் அதியன் வய்யங்கி என செப்பமாக படிக்கலாம். அதியன் சேரக் கிளை மரபினரான அதியமான்கள் குடிப்பெயர். Elalion Taake 402-392 BC - தமிழில் எல்லாளியன் தக்கி என்பது செப்பமான வடிவம். எல்லாளன் என்ற தமிழ் மன்னன் ஈழத்தை மிக சிறப்பாக ஆண்டவன். சீனத்தின் Tiefu பழங்குடி வேள் பெயர் Liu Eloulou 356 -358 BC தமிழில் ஒளிய எல்லாள, ஒளியன் எல்லாளன் என செப்பமாக படிக்கலாம். ஒளியன் சிந்து முத்திரைப் பெயர். திரை நகர போனீசிய மன்னன் பெயர் Elulaios 729- 694 BC - தமிழில் எ ல் லை ள ய , எல்லாளியன் எ ன செ ப் ப மா க ப டி க் க லா ம் . தக்கை - தக்கி, தக்கு, தக்கன் என்றும் வழங்கும். கோவை சூலூரில் கட்டிய சிந்து எழுத்து பொறித்த மட்கலனில் தக்க இன்னன் என பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. சப்பானிய வேந்தரின் ஈமப் பெயர் Taka Kura 1168 - 1180 AD - தக்க குர , தக்கன் குரவன் என செப்பமாக படிக்கலாம். Atserk Amen III 382 BC - தமிழில் ஆட் செருக் ஆமன் , ஆடு செருக்கு ஆமன் என செப்பமாக படிக்கலாம். ஆடு - வெற்றி, செருக்கு -- பெருமிதம். ஆடு செருக்கு ஆமன் என்றால் வெற்றிச் செருக்கள்ள ஆமன் என பொருள். இது கடல் பிறகோட்டிய செங்குட்டுவன், சித்திர மாடத்து துஞ்சிய பாண்டியன் என்பது போல வினைச் சிறப்பு சுட்டிய பெயர். Kolas 295 - 285 BC - தமிழில் காள , காளன்என செப்பமாக படிக்கலாம். இது சிந்துவெளி முத்திரையில் காணப்படும் பெயர். தமிழகத்தில் இன்றும் வழங்குகிறது. காளி இதன் பெண் பால் பெயர். நடு ஆப்பிரிக்காவில் ஒரு மன்னன் பெயர் அலி காளன் என்பது.

> தமிழா நீ உன்தொன்மை வாய்ந்த வரலாற்றை இழந்தால்,
> தமிழா நீ உன்தொன்மை வாய்ந்த இன அடையாளத்தினை இழந்தால்,
> வரலாறே உன்னை அழிக்கும். உன்னை பழிக்கும். இழந்த இன
> அடையாளத்தினை மீள்தேடும் தமிழர்கள் கூட்டம் என்று வரலாறு எழுதும்.
> தமிழரின் வரலாறே மாறியுள்ளது.-இங்கே நாம்- அங்கே பிற இன மக்கள்
> இதைப் படிக்க தவறினால் நீங்களும் தவறு செய்கிறீர்கள்... நயவு செய்து
> படிக்கவும்..... ஒவ்வொரு தமிழனும் அறிய வேண்டியது-

Stiyo 269 - 255 BC - தமிழில் திய்ய. திய்யன் என செப்பமாக படிக்கலாம். தேனி வட்டம் புலிமான்கோம்பை என்ற ஊரில் பேடு திய்யன் அந்தவன் என்ற பெயர் பொறித்த பிராமி நடுகல் கண்டெடுக்கப்பட்டது. திய்யன் என்ற கேரள சாதிப் பெயர் மிக பின்னர் ஏற்பட்டது. கொரிய நாகரிகத்தில் ஒரு மன்னன் பெயர் Deun gol 874 - 849 BC தமிழில் திய்யன் கோல் என செப்பமாக உள்ளது. தகர இனக் கடுஒலி பெற்றுள்ளது. கோல் - கோலப்பன் இன்றும் வழங்கும் பெயர். Bawawl 70 - 60 BC தமிழில் பவ்வல் , வவ்வல் என செப்பமாக படிக்கலாம். அன் ஈறு பெற்று வவ்வன் ஆகும். சீனத்தில் ஓயை அரசின் ஓர் அரசன் பெயர் Helian Bobo 407 - 425 AD - தமிழில் கிளியன் பப்ப , கிளியன் வவ்வன் என செப்பமாக படிக்கலாம். வகரம் பகர கடுஒலியாக திரிந்துள்ளது. இவன் மரபினர் எல்லாரும் கிளியன் பட்டம் தாங்கியுள்ளனர். சோழ மன்னர் சிலர் கிள்ளி எனப்பட்டனர். Barawas 60 - 50 BC - தமிழில் பரவன் என செப்பமாக படிக்கலாம். பகரம் கடுஒலி பெற்றுள்ளது. தமிழில் பரவன் மீனவரை குறிக்கும். கடல் பரவை எனப்படும்.

BSerada 105 -121 AD தமிழில் சேர் ஆத. சேரன் ஆதன் என செப்பமாக படிக்கலாம். சேர மன்னர்களே ஆதன் என்ற பெயர் கொண்டிருந்தனர். காட்டாக. இமய வரம்பன் நெடுஞ் சேரல் ஆதன். Azegan Malbagad 200 - 207 AD - தமிழில் அழகன் மால் பகடு என செப்பமாக படிக்கலாம். மால் - கருமைக் கருத்து, பகடு - எருமை, ஆண் எருமையின் வலிமை ஒடு ஒப்பிட்டு இப்பெயரை சூட்டி இருக்கலாம். கிறித்தவ மதப் பரவலால் தமிழ்ப் பெயர்கள் ஒழிந்தன. ஆங்காங்கே கலப்பு பெயராக Tseyon / Tsion - திசையன் போன்ற பெய்ர்கள் வழக்கூன்றின. தமிழகம், சிந்துவெளி அல்லாத பிற நாகரிகங்களில் அகரம் ஒகரமாயும், வகரம் பகரமாயும், தகரம் சகரமாயும் திரிந்துள்ளன. அப்பெயர்களை தமிழாய் படிக்க மூல எழுத்தையே நாட வேண்டும். மேற்கு நாகரிக மன்னர் பெயர்களும், கிழக்கு நாகரிக மன்னர் பெயர்களும் தமிழாய் இருப்பது இடைப்பட்ட சிந்து நாகரிகமும் தமிழர் நாகரிகமே என்பதை இது வரை மறுத்து வந்தவர்களை நம்பிக்கைப்படுத்த உதவும். எதியோபிய மன்னர் பெயர்கள் தமிழல்ல என மறுப்போர் சங்க இலக்கியங்களில் கற்றத்துறைபோகிய தமிழ் அறிஞர்களை உசாவ வேண்டுகிறேன். அதோடு Indus Script Dravidian, 1995 என்ற நூலை மேற்கோளாக கொள்ளும்படி வேண்டுகிறேன்

மிகப் பலர் எண்ணுவது போல் மூலதாய் நாகரிகமான தமிழர் நாகரிகத்திற்கு ஆப்பிரிக்காவோ, சுமேரியாவோ, சிந்து வெளியோ அல்லது கிழக்கு நாகரிகங்களோ தாயகம் அல்ல. தமிழ் இலக்கியங்கள் தமிழர் தாயகத்தை தென்புலம் என்கின்றன. அயினும் அதற்கு தொல்லியல் சான்று ஏதும் இல்லை. இது தொடர்பாக தமிழ்நாடு தொல்லியல் துறை அடிக்கடல் ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தள்ளது. நல்ல முடிவுகள் வரும் என எதிர் பாரக்கலாம். இப்பெயர் ஒப்பாய்வு ஒரு புதிய களமாக ஏற்கப்பட்டு விரிந்து பரவினால் தமிழ் நாகரிகத்தின் எல்லையும், காலமும் விரிந்து இருப்பதை நிறுவ இயலும்.. சப்பானியர் பெயர்களில் தமிழ் வடிவம் சிந்து எழுத்துகளை பேராசிரியர் இரா. மதிவாணன் படித்துக் காட்டி 20 ஆண்டுகள் ஆன பின்னும் அது புகழ் பெற்ற ஆய்வாளர்களால் இன்னும் ஏற்கப்படாமலேயே உள்ளது. நான் 3 1/2 ஆண்டுகளுக்கு முன் அவரிடம் அவ் எழுத்துகளை படிக்கக் கற்றுக் கொண்டேன். ஈரெழுத்து சான்று இல்லாயினும் அவர் படித்த முறை சரியே. மெஹர்கார் சிந்து நாகரிகம் 9,000 ஆண்டுகள் தொன்மையானவை என்பதால் சிந்து வெளி முத்திரைப் பெயர்கள் பிற நாகரிகங்களில் புழங்கி உள்ளனவா? என்பதை அறிய அதற்கு மேற்கே அமைந்த எதியோபியா, எகிப்து, போனீசியா, அக்காடு, ஈலம், பாபிலோன் நாகரிக மன்னர் பெயர்களை ஒப்பாய்வு செய்ய Google ல் அந்நாகரிக மன்னர் பெயர் பட்டியலை தேடி சொடுக்கினேன். நான் எதிர் பார்த்த வாறே wikipedia free encyclopedia வில் மன்னர் பெயர் பட்டியல் கிட்டியது. வியக்கும்படியாக இந்நாகரிக மன்னர் பெயர்கள் சிந்துவெளி முத்திரைப் பெயர்களோடும், சங்க இலக்கிய மாந்தர் பெயர்களோடும், தமிழ்நாட்டு பானை ஓட்டு சிந்து எழுத்துப் பொறிப்பு பெயர்களோடும் ஒத்திருக்கக் கண்டேன். எனவே ஊக்கமுற்று கிழக்கு நாகரிகங்களான சீனம், கொரியா, சப்பான் நாகரிக மன்னர் பெயர்களையும் ஒப்பிட்டேன். அவற்றுள் பல தமிழ் வடிவில் இருக்கக் கண்டேன்.

இப் பெயர் ஒப்புமை ஆய்வு தமிழர் நாகரிகம் பிற எல்லா நாகரிகங்களுக்கும் தாய் நாகரிகம் என்பதையும், இப் பண்டை நாகரிகங்களை தோற்றுவித்த தமிழர் ஒரு பொதுவான மூல இடத்தை விட்டகன்று இவ் இடங்களில் குடியேறி இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. அதோடு தமிழ் மொழி 10,000 ஆண்டுகள் மேலான பழமை மிக்கது என்பதும் தெளிவானது. இந்த ஒப்புமை ஆய்வு பேரா. இரா. மதிவாணன் சிந்து எழுத்துகளை படித்த முறை சரி என்று மெய்ப்பிக்கப் போதுமானது. கிறித்தவ, இசுலாமிய மதப் பரவலால் மேற்கின் பண்டை நாகரிக தமிழ் பெயர்கள் அவ் இடங்களில் மறைந்தாலும் கிழக்கு நாகரிக இடங்களில் இன்றும் வழங்குவதை உணர முடிகிறது. சப்பான் நாகரிகம் இதற்கு ஒரு சிறந்த சான்று. நம் ஒப்புமை ஆய்வுக்கு தெளிவாக உள்ள சில சப்பானிய பிரதமர் பெயர்களையும் மன்னர் பெயர்களையும் எடுத்துக் கொள்வோம். வங்காளி, இந்தோனேசிய மொழிகள் போல சப்பானிய மொழியிலும் "அ" கரம் "ஒ" கரமாகியுள்ளது. அதோடு "க"கரம் "ஹ" கரமாகவும், "வ"கரம் "ப" கரமாகவும், "த" கரம் ச, ஜ, ஷ வாக திரிந்து உள்ளது. இத் திரிபுகளின் மூல ஒலி கொண்டு படித்தால் தமிழ்ப் பெயர்கள் விளங்கத் தோன்றும்.

பதவி ஏற்பு வரிசையில் 2 ஆம் இடத்தை பிடிப்பவர் பிரதமர் kuroda kiyotaka1888-89 என்பவர். தமிழில் குறு ஆத கய்ய தக்க . குறு ஆதன் கய்யன் தக்கன் என செம்மையாக படிக்கலாம். குறு - இளமைப் பொருள், ஆதன் - சேரர் பெயர், கய்யன் - பண்டை மேற்கு நாகரிகங்களில் இடம் பெறுகிறது. தக்கன் - 1940 ல் கோவை சூளூரில் கிட்டிய சிந்து எழுத்து பொறித்த மட்கலத்தில் தக்க இன்னன் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. பதவி ஏற்பு வரிசையில் 3 & 9 ஆம் இடம் பிடிப்பவர் பிரதமர் yamagata Aritomo 1888-91 & 1898-1900 என்பவர். தமிழில் யாம கத்த அரி தாம, யாமன் கத்தன் அரி தாமன் என செம்மையாக படிக்கலாம். யாமன் - ஒரு பழந் தமிழ்ப் பெயர். பின்பு யா , ஆ எனத் திரிந்து ஆமன் என சங்க இலக்கியத்தில் பயில்கின்றது. கத்தன் - சி.வெ. முத்திரையில் பயிலும் பெயர், அரி - அரியான் என அன் ஈறு பெற்று அரியான் குப்பம் என புதுச்சேரியில் ஓர் ஊருக்கு .பெயராகி உள்ளது. தாமன் - பல மேற்கு நாகரிகங்களில் வழங்குகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாமல் என்ற ஏரி உள்ளது. பதவி ஏற்பு வரிசையில் 16 & 22 ஆம் இடங்களை பிடிப்பவர் பிரதமர் Yamamoto gonbee 1913-

1914 தமிழில் யாம மத்த கான்வி , யாமன் மத்தன் கானவன் என செம்மையாக படிக்கலாம். சி. வெ. முத்திரைகளில் அன் ஈறு பெறாமல் மத் என்றும், ஈறு பெற்று மத்தன் என்றும் இப் பெயர் பயின்று வந்துள்ளது. பண்டைய போனீசிய திரை Ancient tyrian நாகரிக மன்னன் பெயர் Mattan I 840-832 BC இவன் பெயரில் அன் ஈறு இடம் பெறுவ்து தமிழ் அடையாளத்தை தெளிவாக சுட்டுகிறது. அன் ஆண் பால் ஈறு பல நாகரிகங்களில் அர்,அல், அம், ஜ, இ எனவும் முடிகிறது. அவ்வாறே கானவன் என்ற பெயர் கானவி என சப்பானில் வழங்குகிறது


பதவி வரிசையில் 20 ஆம் இடம் பிடிப்பவர் பிரதமர் Takahashi Korekiyo 1921-22 தமிழில் தக்க கத்தி (ஹ,க, ஷ , த மூலம்) காரி கய்ய, தக்கன் கத்தி காரி கய்யன் என செம்மையாக படிக்கலாம். கத்தன் என்பதே கத்தி ஆகியது. காரி - கடை ஏழு வள்ளல்களுள் ஒருவன் மலையமான் திருமுடிக் காரி, காரிக் கிழார் ஒரு புலவர். எகிப்து நாகரிகத்தில் 4 ஆம் ஆள்குடியில் (Dynasty) ஒரு மன்னன் பெயர் MenKaure 2490 - 2472 BC மேன் காரி. தமிழில் மேன் உயர்வான, மேலான என பொருள் தரும் அன் ஈறு பெற்று மேனன் என்றாகும். 7 & 8 ஆம் ஆள்குடியில் பல மன்னர் காரியை பட்டமாகவே கொண்டுள்ளனர். அவருள் ஒருவன் Netri Kare 2150 BC நெற்றி காரி. பதவி ஏற்பு வரிசையில் 24 & 26 ஆம் இடங்களை பிடிப்பவர் பிரதமர் Kato Takaaki தமிழில் காத்த தக்க அக்கி, காத்தன் தக்கன் அக்கி என செம்மையாக படிக்கலாம். காத்தன் - சி.வெ. முத்திரையில் இடம் பெறுகிறத் காத்தன்குடி ஈழத்தில் உள்ள ஓர் ஊர் பெயர் காத்தமுத்து என இக்காலும் பெயர் தமிழில் வழங்குகிறது. அக்கன் என்பதே அக்கி ஆகியது. அன் ஈறு பெறாமல் அக் என பல நாகரிகங்களில் பயில்கின்றது. எதியோபியாவில் ஒரு மன்னன் பெயர் Gari Ak I (4404 BC) காரி அக். 6,400 ஆண்டுகள் பழமையான பெயர் இது. அக்கன் பிற நாகரிகங்களில் அக்கல் எனவும் வழங்கும். அண்மையில் வடலூர் அருகே மருங்கூர் என்ற இடத்தில் "அதியகன்" என பெயர் பொறித்த பிராமி எழுத்து பானைஓடு கண்டெடுக்கப்பட்டது. இதை அத்தி+அக்கன் என பிரித்து படிக்க வேண்டும். பதவி ஏற்பு வரிசையில் 25 & 28 இடங்களை பிடிப்பவர் பிரதமர் Wakatsuki Reijiro 1926-27-31 இதில் வக்க என்ற தமிழ்ப் பெயர் உள்ளது. தமிழக பானைஓட்டு சிந்து எழுத்தில் வக்கன் என்ற பெயர் பயின்றுள்ளது. வ கரம் ப கரமாகி இப்பெயர் எகிப்தின் 24 ஆம் ஆள்குடியில் ஒரு மன்னனுக்கு Bakenranef 720-715 BC வக்கன் அரணி என வழங்குகிறது

பதவி ஏற்பு வரிசையில் 32 ஆம் இடத்தை பிடிப்பவர் பிரதமர் Hiroata Koki 1936-37 தமிழில் கீர அத்த காக்கை, கீரன் அத்தன் காக்கை என செம்மையாக படிக்கலாம். கீரன் ஹகர திரிபு பெற்று எதியோபியாவிலும், எகிப்திலும் வழங்குகிறது. நக்கீரன், கீரனூர் ஆகியன இதன் தமிழ் மரபிற்கு சான்று. அத்தன் தேவாரத்தில் பயில்கிறது. காக்கை - ஈழமன்னன் பண்டார வன்னியனை ஆங்கிலயேர்க்கு காட்டிக் கொடுத்தவன் காக்கை வன்னியன். எகிப்தின் 5ஆம் ஆள்குடி மன்னன் பெயர் Neferirkare Kakai 2477-2467BC. பதவி ஏற்பு வரிசையில் 34 & 38 ஆம் இடங்களை பிடிப்பவர் பிரதமர் Konoe Fumimaro 1937-39 & 1940-41 தமிழில் கானை உமி மாற, கானை உமி மாறன் என செம்மையாக படிக்கலாம். கானை - சி.வெ. முத்திரையில் அரிதாக வழங்கும் பெயர் இது கான், கானன் என சிந்து முத்திரையில் பரவலாக வழங்குகிறது. உமி - உமன் என தமிழக பானைஓட்டு சிந்து எழுத்துகளில் பயில்கிறது உமி,வுமி,புமி,குரஅை என திரியும். உமன் மேற்கு நாகரிகங்களில் உமர்(Omar) எனவழங்குகிறது இன்றும். மாறன் பாண்டியர்குரிய பெயர்.

பதவி ஏற்பில் 41 ஆம் இடத்தை பிடிப்பவர் பிரதமர் koiso Kuniaki 1944-45 தமிழில் காய் த குன்னி அக்கி , காயன் த குன்னி அக்கி என செம்மையாக படிக்கலாம். காயன் - ஆதாம் ஏவாள் மகன் Cain, மேற்கு நாகரிகங்களில் வழங்குகிறது. காயன்குளம் கேரளத்தின் ஓர் ஊர். குன்னி - அன் ஈறு பெறாமல் குன் எனவும், அன் ஈறு பெற்று குன்னன் எனவும் சி.வெ. முத்திரைகளில் பயில்கிறது. இன்றும் குன்னிராமன் என்ற பெயருள்ளோர் உண்டு. அக்கி - அக்கன், அக்கல், அக், அக்கம் என பலநாகரிகங்களில் வழங்குகிறது. பல்லங்கி என்ற இடத்தில் அமைந்த மாயன் நாகரிக மன்னர் பெயர் Ahkal Mo Nahb II 565 -570 AD அக்கல் மா நக்கவன். பதவி ஏற்பில் 46 ஆம் இடத்தை பிடிப்பவர் பிரதமர் Katayama Tetsu 1947-48 தமிழில் கத்த யாம திட்டு, கத்தன் யாமன் திட்டு என செம்மையாக படிக்கலாம். திட்டன் என்பதே திட்டு என வழங்குகிறது. திட்டன்குடி, திட்டக்குடி. பதவி ஏற்பில் 61 ஆம் இடத்தை பிடிப்பவர் பிரதமர் Satu Eisaku 1964-72 தமிழில் சாத்து இசக்கு , சாத்தன் இயசக்கன் என செம்மையாக படிக்கலாம். சாத்தன் - சி.வெ. முத்திரைகளிலும், சங்க இலக்கியங்களிலும் பயிலும் பெயர். சாத்தய்யா, சாத்தப்பன் இற்றை வழக்கு. இசக்கு இசக்கிமுத்து என இக்கால் நெல்லையில் வழங்குகிறது. இந்த இசக்கு மேற்கு நாகரிகங்களிலும் வழங்குகிறது. பதவி ஏற்பு வரிசையில் 64 ஆம் இடத்தை பிடிப்பவர் Tanaka kakuei 1972-74 தமிழில் தன் அக்க கா குய்யி , தன்னன் அக்கன் கா குய்யி என செம்மையாக படிக்கலாம். தன்னன் - அன் ஈறு பெறாமல் தன் என்றும், அன் ஈறு பெற்று தன்னன் என்றும் சி.வெ. முத்திரைகளில் வழங்குகிறது. தன்னவன் இதன் மற்றொரு வடிவம். கா - சி.வெ. ல் ஒற்றை எழுத்தாகவே பயில்கிறது. ஆங்கில U எழுத்தின் இரு மேல் ஓரங்களிலும் இரு கோடுகள் பெற்று ஏராளமாக காணப்படுகிறது. இக் கா "திரு" என்பதைப் போல் மதிப்புரவாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். பல்லங்கி மாயன், எகிப்து, போன்ற நாகரிகங்களிலும் ஒற்றை எழுத்தாகவே வழங்குகிறது. எகிப்தில் ஒரு பொதுமகன் பெயர் கா அப்பர் என்பது. குய்யி - சி..வெ. முத்திரைகளில் அன் ஈறு பெறாமல் குய் என்றும் அன் ஈறு பெற்று குய்யன் என்றும் வழங்குகிறது. அசுடெக் மாயன் நாகரிக மன்னர்கள் பெயர் Cui tal huac 1520 AÐ குய் தள் குய் அக் & Cua uhtec mac 1520-1525 AD குய்ய உக் திக் மாக் என்பது. பதவி வரிசையில் 67ஆம் இடம் பிடிப்பவர் பிரதமர் Fukuda Takeo 1976-78 பக்குட தக் ஈய , பக் உடை தக்கன் ஈயன் பதவி வரிசையில் 91 ஆம் இடம் பிடிப்பவர் பிரதமர் Fukuda yasuo 2007-2008. தமிழில் பக் என்றால் பை என பொருள் பக் உடை என்றால் பை போன்ற உடை எனப்பொருள். சங்க இலக்கியத்தில் பயிலும் ஆசிவக மதத் தலைவர் பெயர் பக்குடை நன் கணியார் என்பது. இப்போது பதவியில் உள்ள பிரதமர் பெயர் Kan Naoto 2010 முதல் தமிழில் கான் நவ் அத்த, கானன் நவ்வன் அத்தன் என செம்மையாக படிக்கலாம். கானன் - அன் ஈறு பெறாமல் கான் என்றும், அன் ஈறு பெற்று கானன் என்றும் சி.வெ. பயில்கிறது. கானவன் இதன் மற்றொரு வழக்கு. கானவன் தமிழக பானைஓட்டு சிந்து எழுத்தில் இடம்பெறுகிறது. அத்தன்-அத்தர், அத்தி என பிற நாகரிகங்களில் வழங்கும். சென்னை சப்பானிய துணைத் தூதரக தலைவர் பெயர் Takayuki Kitagawa தமிழில் தக்கை உக்கி கித்த கவ்வ, தக்கை உக்கி கித்தன் கவ்வன் இதன் செம்மை வடிவு. தக்கை-தக்கன், தக்கி, தக்கு எனவும் வழங்கலாம். உக்கி தமிழக பானைஓட்டு சிந்து எழுத்தில் உக்கன் பயின்று வந்துள்ளது. கித்தன் ஈரானின் தென்மேற்கே அமைந்த ஈலம் நாகரிகத்தில் ஒரு மன்னன் பெயர் Hita I 2270 BC க, ஹ திரிபு. மற்றொரு மன்னன் பெயர் Attar Kittah 1370 BC கித்தன் ஈலத்தில் பயின்றாலும் சி.வெ. இப்பெயர் இல்லை. கவ்வன் - சி.வெ.முத்திரையில் மட்டும் காணப்படுகிறது. இனி சப்பான், கொரியா, சீனம் ஆகிய நாகரிகங்களில் மன்னர்களுக்கு இறந்த பின்பு பெயர் (Posthumus Names) வைப்பது ஒரு வழக்கம். அவற்றுள் அடங்கும் சப்பானிய வேந்தர் பெயர்களை ஒப்பாய்வோம். Annie 549-476 BC அன்னி சங்க இலக்கியங்களில் பயிலும் ஒரு மன்னன் பெயர். Koan 392-291 BC காயன் ஏற்கெனவே ஆயப்பட்டது. Korei 290-215 BC காரி Anko 453-456 AD அங்க, அங்கன், அங்கு, அங்கி என எதியோபியா, சி. வெ. நாகரிகங்களில் வழங்குகிறது. Ankan 531-535 AD அங்கன்-அன் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் அங்கு சாமி, அங்கப்பன், அங்கய்யன் வழங்குகின்றன. சி.வெ. ல் அங்கு, அங்கன் பயில்கிறது. எதியோபிய மன்னன் ஒருவனுக்கு Angabol 41 42 BC என பெயர். Kobun 692 AD காப்பன் சி.வெ. ல் வழங்கும் பெயர். பெரு இன்கா நாகரிக 12-16 நூற்றாண்டு மன்னர் பலர் Capac காப்அக் , காப்பன் அக்கன் என பட்டப் கொண்டனர்.

# இங்கே நாம் சைவ சித்தாந்த யோகாசனம் ( YOGA ) படைத்தோம்!

## (எமது உடலுக்குள் நிகழவேண்டிய கிரியை ஆகும்)



இங்கே தமிழ் - விஞ்ஞானம் - ! உலகையே கட்டுப்படுத்தும் அபூர்வ கலை!! சித்தர்கள் சக்திகள் உடையவர்கள் எனினும் இவர்கள் உலகாயு இயல்புகளை சிறப்பாக அறிந்து பயன்படுத்தினர் என்பதுவே தகும். இவர்களின் மருத்துவ, கணித, இரசவாத, தத்துவ, இலக்கிய, ஆத்மீக ஈடுபாடுகள் வெளிப்பாடுகள் இவர்களின் உலகாயுத பண்பை எடுத்தியம்புகின்றன. ஆயினும் இவர்கள் வெறும் பொருளியல் வாதிகள் அல்ல. மெய்ப்புலன் காண்பது அறிவு என்பதிற்கிணங்க, உண்மை அல்லது நிச நிலை அடைய முயன்றவர்கள் சித்தர்கள்..

-சித்தர்கள் கண்டறிந்த வாத வித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும். உலோக வகைகள், உப்பு வகைகள், பாஷாண வகைகள், வேர் வகைகள், பட்டை வகைகள், பிராணிகளின் உடம்பிலே உற்பத்தியாகும் கோரோசனை கஸ்தூரி, மூத்திரம், மலம் முதலியவைகளின் குணங்களை ஆராய்ந்து கண்டிருக்கின்றனர். காட்டிலும் மலையிலும் குகையிலும் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். இன்றிருப்பதைப்போல பரிசோதனை சாலைகள் அன்று இருக்கவில்லை. எனினும் அவர்களின் ஆராய்ச்சிகள் இன்றைய விஞ்ஞான ஆய்வுடன் ஒத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

செயற்கைக்கோள் உதவியில்லை, தொலைக்காட்சிகளின் துணையுமில்லை ஆனாலும் பன்னிரு மாதங்களின் காலநீட்டிப்பினை அறுதியிட்டு கூறியுள்ளனர் நம் பண்டைய தமிழர் !!! பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே நம் முன்னோர்கள் பயன்படுத்திவந்த கால அளவுகள் இத்தனை துல்லியமானவையா !!!கட்டிடங்களில் கணிதக் கலை !! நம்மை வியப்பில் ஆழ்த்தும் கணக்கதிகார செய்யுள்கள்.

தமிழர் சிற்பக்கலை கோவில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். நீலம் ஓடிய, சிவப்பு படர்ந்த கருங்கல். உயர்ந்த கிரானைட். இரண்டு கோபுரங்கள் தாண்டி, விமானம் முழுவதும் கண்களில் ஏந்திய அந்தக் கோவிலின் நீளமும், அகலமும், உயரமும் பார்க்கும்போது, வெறும் வண்டல் மண் நிறைந்த அந்தப் பகுதிக்கு இத்தனை கற்கள் எங்கிருந்து வந்தன, எதில் ஏற்றி, இறக்கினர், எப்படி இழுத்து வந்தனர், எத்தனை பேர், எத்தனை நாள், எவர் திட்டசிந்து வெளி நாகரீக, என்ன கணக்கு.



சிந்து வெளி நாகரீகம்

# சிவகாமி அம்மன் தேர்

காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயம்
தேர் உற்சவ காட்சி கீழே படத்தில் காணலாம்.





# காரைநகர் மணற்காடு அம்மன் ஆலயத்திற்கு

## திருக்கோபுரம் அமைப்பதற்கான அடி அத்திவாரம் போடும் காட்சி கீழே



# மாணவர் பக்கம்

## மாணவர்களே! நீங்களும்.........



மாணவர் பக்கத்திற்கு உங்களின் கவிதை, கட்டுரை கதை, சிறுகதை, விடுகதை, பழமொழிகள், பொன்மொழிகள், பொது அறிவு விவேகம், ஓவியம் போன்றவை "காரை ஆதித்தியனில்" இடம்பெற நீங்கள் செய்ய வேண்டியது: பின்வரும் படிவத்தை பூர்த்தி செய்து ஆக்கத்துடன் உங்கள் படத்தையும் இணைத்து கீழே உள்ள விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

பாடசாலை :..........................................

மாணவர் பெயர் :..........................................

தரம் :..........................................

ஆசிரியர்

பெயர் :..........................................

திகதி :.................... கையொப்பம் :....................

மாணவர் பக்கம்
"காரை ஆதித்தியன்"
த. தயாபரன்,
இல. 5, 6/2
உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வியாவில் ஐயனார் ஆலயத்தினால் பாராட்டுவிழா நடாத்தி கௌரவிப்பு

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தினால் கடந்த மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் பாடசாலைகளில் கல்வி பயின்று சித்தியடைந்த 19 மாணவர்களுக்கும் பணப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

13.10.2013 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்விற்கு வடமாகாணக் கல்வியமைச்சின் பிரதிச் செயலர் ப. விக்னேஸ்வரன், கல்விக்காருண்யன் இ. ச. பே. நாகரட்ணம், கோட்டக் கல்வி அதிகாரி பு. விக்னேஸ்வரன், காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலர் இ. திருப்புகழுர்சிங்கம், உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஆலய அறங்காவலர் மகாராணி க. சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கான பிரதான அனுசரனையினை பிரிட்டனில் உள்ள தொழிலதிபர் நட்டு நட்டுவாணி அவர்கள் வழங்கியிருந்தார்.



## இப்பவும் சிலர்



உண்மை என்ன தெரியுமா? ஒருவர் இன்னொருவரை பற்றி விமர்சனம் செய்யமுன்பு தன்னைப்பற்றி முதலில் சிறிதளவு சிந்தனை செய்யவேண்டும். இங்கு புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் பல குழப்பங்கள் நிறையவே உண்டு. தங்களை யார் என்பதைக் கூட ஒரு கணம் மறந்து தலைக்கணம் கொண்டு செயல்படுவது அவர்களின் செயற்கை புத்தி அவர்களின் சுய வடிவம் அவர்ரவர் ஊர் சென்று பார்த்தால் உண்மை என்ன என்பதை புரிந்து விடும். அந்த உண்மைகளை ஒரு பட்டியல் போட்டு காண்பிக்க முடியும். ஆனால் அது பத்திரிகையின் வேலை கிடையாது ஆனால் ஊர் மக்கள் மனங்களில் பதிந்த விடயம். புறங்கூறுவோர் தெரிந்து கொள்ள வேண்டும் புறம் சொல்லுதல் எந்தளவுக்கு ஏற்றது என்பதை தெரிந்தே சொல்லுங்கள். அடுத்தது என்ன??

- பட்டியல் தான் -

விரைவில்....

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் சுயாதீன நிறுவன தொலைக்காட்சிச் சேவை நிகழ்ச்சிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியில்

## யாழ்ற்ரன் கல்லூரி மாணவிகள் சிறப்புத் தகைமைகளைப் பெற்றுள்ளனர்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் சுயாதீன நிறுவன தொலைக்காட்சிச் சேவை நிகழ்ச்சிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியில் யாழ்ற்ரன் கல்லூரி மாணவிகள் சிறப்புத் தகைமைகளைப் பெற்றுள்ளனர்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் இலங்கை 'ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் மூலம் வீடியோ செய்து ஒலிபரப்பப்படும் வேலைத்திட்டத்தில் யாழ்ற்ரன் கல்லூரி மாணவிகள் 16. 06. 2013 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள சுயாதீன தொலைக்காட்சி சேவை நிறுவனத்தில் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகள் பங்கு பற்றின. இதில் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்கள் சிறந்த முறையில் பங்கு பற்றி பாராட்டைப் பெற்றனர்.




தேயிலைச் செடிகள் தொடர்பான தேவையற்ற துளிர்களை நீக்கும் பொறியினைக் கண்டு பிடிப்பதே இப் புத்தாக்கப்போட்டியாகும். இதில் இம்மாணவிகள் ஒரு பொறி செய்வதற்கான Presentation ஐ செய்து மேற்படி புத்தாக்கக்குழுவினரால் சிறந்த பாராட்டினைப் பெற்றனர். இப்போட்டியில் கலந்து கொண்ட மாணவிகளையும் இவர்களை நெறிப்படுத்திய தீவக வலய விஞ்ஞான பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர் திரு. பு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களையும் கல்லூரி அதிபர் பாராட்டுகின்றார். இப் போட்டியில் கலந்து கொண்ட ஏனைய கல்லூரிகள் இலங்கையின் தேசிய பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியில் கலந்து கொண்ட மாணவிகள்

1. செல்வி. ஆரணி தர்மலிங்கம் தரம் 11
2. செல்வி. மனோகரி சுப்பிரமணியம் தரம் 11
3. செல்வி. காயத்திரி ஆனந்தராசா தரம் 11
4. செல்வி. சசிப்பிரியா அருணகிரிநாதன்

கல்லூரி மாணவிகள் கடந்த ஆண்டும் புத்தாக்கப் போட்டியில் பங்கு பற்றி சிறப்புத்தேர்ச்சிகளைப் பெற்றனர் என்பதையும் இவ் இணையத்தளத்தில் ஏற்கனவே வெளியிட்டுள்ளோம்.

## நான் யார்?



- எனது பெயர் ராகேஷ் ரவீந்திரன்.
- எனது வயது 16.
- நான் பாசல் நகரில் வசிக்கின்றேன்.
- நான் 10ஆம் வகுப்பில் கல்வி கற்கின்றேன்.
- நான் பிற்காலத்தில் நிர்வாகத்துறையில் கடமையாற்ற விரும்புகின்றேன்.
- பாசல் தமிழ்ப் பாடசாலையில் 6ஆம் வகுப்பு வரை கல்வி கற்று தற்போது 9ஆம் ஆண்டு தமிழ் பரீட்சையில் தோற்ற இருக்கின்றேன்.
- எனது பொழுதுபோக்கு உதைப்பந்தாட்டம் விளையாடுதல், கணனி மூலம் கல்வி கற்றல், PLAYSTATION விளையாடுதல், வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல் என்பன.
- நான் பல மேடை நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளேன்.
- எனக்கு தமிழ், ஜேர்மன், ஆங்கிலம், பிரென்ஞ் ஆகிய மொழிகள் தெரியும்.

மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்.
தரணியிலே பெருமை வேண்டும்;

கண் திறந்திட வேண்டும்.
காரியத்தில் உறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்.
பெரிய கடவுள் காக்க வேண்டும்;
மண் பயனுற வேண்டும்.
வானகமிங்கு தென்பட வேண்டும்;
உண்மை நின்றிட வேண்டும்!


சுப்பிரமணிய பாரதியார்




# படித்ததில் கிடைத்தது

'இறைவனை பூஜித்தால் கேட்பது கிடைக்கும். மனநிம்மதி பெறலாம், சந்தோஷமாக வாழலாம். என்று பொதுவாக நம்பப்படுகிறது. அதேசமயம், 'தலையெழுத்தை மாற்றவே முடியாது. விதிப்படிதான் நடக்கும்' என்றும் கூறப்படுகிறது. ஏன் இந்த முரண்பாடு?

விதி என்பது நாம் முன்புசெய்த கர்மாவின் பலன்கள். அவற்றை அதிர்ஷ்டம் (பார்க்கமுடியாதவை) என்று கூறுகிறோம். அவை நமக்கு நாள்தோறும் சுகத்தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருகின்றன. இதைத்தான் நாம்பாவ புண்ணியம் என்றும், வினையென்றும் சொல்கிறோம். நமக்கு துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பாவங்களைக் குறைப்பதற்கு நாம் அதேமாதிரி அதிர்ஷ்டமான பலனை ஏற்படுத்தவேண்டும். அது எதிர்ப்பு சக்தியாக (Antibody) வேலைசெய்கிறது. பிரார்த்தனை என்பது ஒரு கர்மா, செயல், அந்த கர்மாவின் பலன் அதிர்ஷ்டமாக இருக்கிறது. எவ்வளவு உறுதியாகப் பிரார்த்தனை செய்கிறோமோ. அதற்கு ஏற்றமாதிரி பாவத்தைக் குறைப்பதோ அல்லது முழுமையாக நிவர்த்திசெய்வதோ இயலும். இதேபோல். பிரார்த்தனையின் மூலம் நமக்கு நல்லது செய்யும் புண்ணியத்தையும் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.



சுவாமி தயானந்த சரஸ்வதி



## அமுதே தமிழே அழகிய மொழியே

அமுதே தமிழே அழகிய மொழியே எனதுயிரே
சுகம் பல தரும் தமிழ்ப்பா
சுவையொடு கவிதைகள் தா
தமிழே நாளும் நீ பாட (அமுதே)

தேனூறும் தேவாரம் இசைப்பாட்டின் ஆதாரம்
தமிழிசையே தனியிசையே தரணியிலே முதலிசையே
ஊன்மெழுகாய் உருகும் கரையும் அதில் உலகம் மறந்து போகும்
பூங்குயிலே என்னோடு தமிழே நாளும் நீ பாடு (அமுதே)

பொன்னல்ல பூவல்ல பொருளல்ல செல்வங்கள்
கலைபலவும் பயிலவரும் அறிவுவளம் பெருமைதரும்
என்கனவும் நினைவும் இசையே இசையிருந்தால் மரணமேது
என்மனதில் தேன்பாய தமிழே நாளும் நீ பாடு (அமுதே)

புலமைப்பித்தன்

# எமது ஊர் தெரிந்து கொள்வோம்

1. எமது ஊர் காரைதீவு என்பதிலிருந்து காரைநகர் என பெயர்மாற்றம் பெற்றது............... ஆண்டாகும்.
   1) 10.10.1922 2) 12.05.1925 3) 08.04.1900 4) 12.09.1923

2. அந்நியர் ஆட்சியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சிந்தனையை பின்பற்றி எமது கிராமத்தில் முன்மாதிரியாக சைவ ஆங்கில பாடசாலையை உருவாக்கியவர்............ அவர்கள்.
   1) இலட்சுமணபிள்ளை 2) கந்தப்பர்
   3) சயம்பு உபாத்தியாயர் 4) F.X.C. நடராஜா

3. மலேசியநாட்டில் காரையூனியன் அமைத்த ஆண்டு ஆகும்.
   1) 1922 2) 1944 3) 1919 4) 1858

4. காரைநகரில் மணிவாசகர்சபை உருவாகிய ஆண்டு எது?
   1) 1935 2) 1947 3) 1950 4) 1940

5. காரைநகர் மணிவாசகர்சபை உருவாக ஆசீர்வதித்த பெரியார் யார்?
   1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 2) காஞ்சிபெரியவர்
   3) சிவயோகசுவாமிகள் 4) சுவாமி விபுலானந்தர்

6. காரைநகரில் சைவமகாசபை உருவாகிய ஆண்டு எது?
   1) 1815 2) 1915 3) 1940 4) 1924

7. காந்தீயத்தின் அடிப்படையில் குடிசைக் கைத்தொழிலை காரைநகரில் அறிமுகம் செய்து நடத்திய பெரியவர் யார்?
   1) J.C. குமரப்பா 2) பேப்பர் சுவாமிகள்
   3) திரு. நவரட்ணராஜா (M.A) 4) கலாநிதி ஆ. தியாகராசா

8. காரைநகரில் சர்வோதய இயக்கத்தை செயற்படுத்த முனைந்த சமுதாய சிந்தனையாளர்....................ஆகும்.
   1) வித்துவான் மு. சபாரட்ணம் 2) திரு. ஆ. கனகசபை
   3) திரு. அல்வின் ஏபிரகாம் 4) திரு. ஆ. சுந்தரமூர்த்தி

9. காரைநகரில் 1932இல் உருவான நூலகத்தின் பெயர் என்ன?
   1) சுவத்தப்பிரான் புத்தகசாலை 2) கலைமகள் நூலகம்
   3) வாரதா நூலகம் 4) காரைநகர் நூலகம்

10. காரைநகர் இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள நடராசா நினைவு மண்டபத்தை திறந்து வைத்தவர் யார்?
    1) டாக்டர் ஜவர் ஜென்னிங்ஸ் 2) பண்டிதை திருமதி தங்கம்மா நடராசா
    3) திரு. S. சுப்பிரமணியம் B.Sc 3) நீதிமந்திரி A. S. ராஜபக்ச

11. காரைநகரையும் பொன்னாலை கிராமத்தையும் இணைக்கும் பாலங்களை அமைத்த பொறியியலாளர் யார்?
    1) பொறியியலாளர் குமாரசூரியர் 2) பொறியியலாளர் சமரசிங்க
    3) பொறியியலாளர் ஜேம்ஸ் 4) பொறியியலாளர் F. M. ஆம்ஸ்ரோங்

12. காந்தித்தொண்டரென அழைக்கப்பட்ட ஊர்ப்பெரியவர் யார்?
    1) வித்துவான் F.X.C நடராசா 2) க. நாகமுத்து புலவர்
    3) சுப்பிரமணிய தேசிகர் 3) உடையார் நாகலிங்கம்

13. காரைநகரில் உள்ள மிகவும் பழைமையான "பிள்ளைமடம்" கட்டிய பெரியவர் யார்?
    1) நீதியரசர் நடராசா 2) முகாந்திரம் முத்துக்குமாரு
    3) அம்பலவி முருகர் 4) கனகசபைப்பிள்ளை

14. காரைநகரில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாகிய வைத்தியசாலை எந்த பெரியவரின் நினைவாக உருவாக்கப்பட்டது?
    1) S. F. கிறீன் 2) டாக்டர் ஆ. நடராசா
    3) அல்வின் ஏபிரகாம் 4) சயம்பு உபாத்தியாயர்

15. www.Karainagar.com என்ற இணையத்தளம் எந்த நாட்டிலிருந்து செயற்படுகிறது?
    1) லண்டன் 2) பாரீஸ் 3) கனடா 4) சுவிஸ்

16. ன்,ஆ,த்,ய,தி,கா,தி,ரை என்ற சொற்பதத்தை கண்டுபிடியுங்கள்?

    ....................................................................................................

17. Economic Development in Ceylon என்ற நூலை எழுதியவர் யார்?
    1) அல்வின் ஏபிரகாம் 2) ஆ. தியாகராசா MA
    3) F.X.C நடராசா 4) ஐ. தி. சம்பந்தன்

18. எமது கிராமத்திலும் தமிழ்நாட்டில் உள்ளதைப்போல் உருவான ஒரு சமயநிறுவனம் எது?
    1) சிவ ஆச்சிரமம் 2) பேப்பர் சுவாமிகள் ஆச்சிரமம்
    3) மெய்கண்டார் ஆச்சிரமம் 4) மணிவாசகர்சபை

19. ஊரை சார்ந்துள்ள கோவிலின் பெயரில் உருவான ஒரு புராணகாவியம் எது?
    1) காரைமாண்மியம் 2) தன்னையமக அந்தாதி
    3) ஈழத்துச்சிதம்பரபுராணம் 4) ஐவர்புராணம்

20. காரைநகரில் "மணியோசை" என்ற பெயரில் பல தடவைகள் நடைபெற்ற நிகழ்ச்சி எது?
    1) நடனநிகழ்ச்சி 2) இசைநிகழ்ச்சி 3) நாடகம் 4) கவியரங்கு

**அடுத்த இதழுக்கு விடைகளை எழுதி அனுப்புங்கள்**

வினாக்களை தொகுத்து வழங்குபவர் - சிவத்தமிழ் காவலர் ஆறுமுகம் செந்தில்நாதன்

## காரைநகர் இலங்கை வங்கி சுப்பிரமணிய வித்தியாசாலையில்

# சிரமதானம்

இலங்கை வங்கி காரைநகர் கிளையினால் சுப்பிரமணிய வித்தியாசாலை வளாகம் சிரமதானப் பணி மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கியின் 74வது ஆண்டு நிறைவை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு சிரமதானப்



பணியினை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் மேற்கொண்டனர்

இந்தச் சிரமதானப் பணியில் வங்கி முகாமையாளர், ஊழியர்கள் கலந்துகொண்டனர்

# தமிழா

உன் பெருமையை உன்னைத் தவிர யாவரும் அறிவர். அதை அழிக்க வேண்டும் என்பதே அறிந்தவரின் நோக்கமல்லாமல் காக்க வந்தவர் யாரும் கிடையாது.
இனியும் வரப்போவதில்லை. இதை உணர்ந்தால் நீயும் உயரலாம், உன்னோடு சேர்ந்த சிவத்தமிழ்ப் பண்பாடும் மேன்மையுறும்.
சைவம் எழுந்த பொழுது தமிழ் எழுந்தது.
தமிழ் எழுந்த பொழுது தமிழன் எழுந்தான்.
தமிழ் எழுந்த பொழுது தமிழன் அட்டமாசித்திகளுடன் எழுந்தான்.
இருளில் துணிந்து பின் அருளில் பணிதலே சரணாகதி
சரணாகதி என்பது பணிதல் அல்ல.
சரண் புகவேண்டும். அவ்வாறு தஞ்சமெனப் புகும்போது மாயாசக்திகளிடம் சிக்கிக்கொள்ளக்கூடாது. இதையே திருநாவுக்கரசர் தனது தேவாரத்தில் கீழ்வருமாறு தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"நாமார்க்கும் குடி அல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோம் அல்லோம்"

இதுவரையில் பணியாது துணிவதே சிவபெருமானிடம் சரணாகதி அடைய நம்மைத் தகுதிப்படுத்தும். அவ்வாறு தகுதியடைந்த பின் எவ்வாறு இருப்போம் என்பதை அடுத்த அடியில் கூறுகிறார்.
"இன்பமே எமக்கு எந்நாளும் துன்பமில்லை"
இந்த நிலையில் நாம் சிவனடியில் சரண் அடைந்தோம் என்று பொருள். இதையே அடுத்து வரும் அடிகளில் கீழ்வருமாறு உரைக்கிறார்.

"தாமார்க்கும் குடியல்லாச் சங்கரன் நற்சங்க
வெண்குழை ஓர் காதில் போமாற்கே நாம் என்றும்
மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச் சேவடி இணையே
குறுகினோமே"

இவ்வாறு மாயவிருளுக்குப் பணியாமல் துணிந்த பின்னரே சிவனடியில் சரணாகதி அடைய முடியும்.
தமிழா உனக்கு ஏன் இந்தத் தாழ்வு?
எதை வைத்திருந்தபோது நீ உயர்ந்திருந்தாய்?
எதைத் தொலைத்ததால் இன்று சிறுமையுற்றாய்?

"கடுஞ்சினத்த கொல் களிறும்
கதழ்பரிய கலி மாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடனே மாண்டராயினும்
மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

என்கிறது சங்க இலக்கியம் புறநானூறு
யானை(களிறு), குதிரை (மா), தேர், காலாள் (மறவர்) என ரதகஜதுரக பதாதிகளைச் சேனையாகக் கொண்டிருப்பினும் ஒரு மன்னனின் மெய்யான கீர்த்தி (புகழ்-மாட்சி-மாண்ட) அறம் தவறாமையே ஆகும் என்பது இப்பாடலின் பொருள்.

"பொன் செய் கொல்லன் தன் சொல்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் நீதி
என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்"

எனக் கூறி நீதி தவறிய பாண்டியன் நெடுஞ்செழியன் அக்கணமே உயிர் துறந்தான் எனச் சிலப்பதிகாரம் உரைக்கிறது.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் உகுநீர் நெஞ்சுசுட"

என தன் கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியை அடித்தபோது பசுவின் கண்களில் வழிந்த நீர் மனுநீதி சோழனின் நெஞ்சிலே

"உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுமடி"

எனச் சுட்டது.
இந்த அறம் எங்கே போயிற்று? நெஞ்சிலே செம்மை இல்லாமல் போயிற்று மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்.
தமிழா முக்காலத்தும் உன்னைச் செம்மைப் படுத்தியது சிவமே என்பதை ஏன் மறந்தாய்?
சிவம் (சைவம்) பற்றியே எழுந்தது பல்லவப் பேரசு. சிவபாதசேகரன் எனப் போற்றப்பட்ட இராஜராஜசோழன் சிவம் பற்றியே கங்கையும் கடாரமும்(மலேசியா) கடந்த சோழப் பேராசை உருவாக்கினான்.
இன்னும் ஒன்றும் கெட்டுவிடவில்லை
பற்றுக பற்றற்றான் சிவபெருமான் பற்றை அப்பற்று மனக் கவலை போக்கும் உன்னை மாசிலாதவன் ஆக்கும் மதிநுட்பத்திலும் மதிப்பிலும் மேன்மைப்படுத்தும்.தற்குறைவாக அமைந்தது ஆன்மீகப் பலமேதமிழ் ஈழம் 110 வருடக்கணக்காக நடந்து வரும் ஒரு போராட்டம். சுமார் 80

**தமிழனிடம் வீரம், விவேகம், அறிவு, ஆயுதம், பணம், பாசம் முப்படைகளும் இருந்தும் தமிழர் தமிழர்களுடைய வாழ்வுப் பயணம் தடம் புரண்டு போவதற்குக் காரணம்...**

ஆண்டுகளாக ஜனநயாக வழியில் நடந்த போராட்டம் பின்பு 20 ஆண்டுகளாக ஆயுதம் ஏந்தி போராட்ட காலமாக மாறி, மூன்று தலைமுறைகளை கண்டு இன்று மறுபடியும் சிவம் எழுந்தபோதெல்லாம் தமிழும் தமிழனும் எழுச்சி பெற்றனர் என்பது வரலாறு கூறும் உண்மை!
சிவத்தமிழர்களுடைய வாழ்வுப் பயணம் தடம் புரண்டு போவதற்குக் காரணம்- பகுத்தறிவேபொறுப்பு சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் (தந்தை செல்வா) என்று எல்லோராலும் அழைக்கப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ் மக்களின் மதிப்புக்குரிய, வணக்கத்திற்குரிய தலைவராக மதிக்கப்படுபவர் -தந்தை செல்வா சொன்னதைப் போல், "தமிழரைக் கடவுள் தான் காப்பாற்றவேண்டும்"
தமிழனிடம் வீரம், விவேகம், அறிவு, ஆயுதம், பணம், பாசம் முப்படைகளும்.
இருந்தும் தமிழர். கொல்லப்பட்டுள்ளனர்.
(தமிழன் சென்ற இடமெல்லாம் அடி வாங்கினான்)
தமிழனின்முப்படைகளும். பின்வாங்கியதின் காரணம் தமிழா
தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேறாமைக்குத் தற்குறைவாக அமைந்தது சிவப் பலமே!
தற்குறைவாக இருந்தசிவப் பலத்தை வளர்த்துக்கொண்டு இலக்கை அடைந்து விடலாம் தமிழ் ஈழம் 110 வருடக்கணக்காக நடந்து வரும் ஒரு போராட்டம் . சுமார் 80 ஆண்டுகளாக ஜனநயாக வழியில் நடந்த போராட்டம் பின்பு 20 ஆண்டுகளாக ஆயுதம் ஏந்தி போராட்ட காலமாக மாறி, மூன்று தலைமுறைகளை கண்டு இன்று மறுபடியும் போராட்ட காலமாக மாறி, மாறி தடம் புரண்டு போவதற்கு என்ன காரணம்.
ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சிவத்சரணாகதி அடைவதன்மூலம் இலக்கினையும் இலகுவாக அடைந்து விடலாம்.
சரணாகதி என்பது ஒரு செயல் என்பதை விட ஒரு மனநிலை எனலாம்.
எந்த காரியத்திற்காக நாம் சரணாகதியை மேற்கொண்டாலும், சரணாகதி அப்பலனை முடிவான பலனை முதலிலேயே தரவல்லது.
முடிவான பலனை செயலை ஆரம்பிக்கும் முன் முதலிலேயே தரும் மனநிலை சரணாகதி.
முடிவான பலனை முதலிலேயே தரும் முடிவுக்குரிய மனநிலை சரணாகதி.
அடக்கத்தால் சரணாகதி பலிக்கும். சரணாகதி அடக்கவுணர்வைத் தரும்.
மனம் எதை ஏற்கிறதோ, அப்பலனை இதுபோல் தரவல்லது சரணாகதி
அபிலாசைகள் நிறைவேறாமைக்குத் தற்குறைவாக அமைந்தது ஆன்மீகப் பலமே!
தற்குறைவாக இருந்த ஆன்மபலத்தை வளர்த்துக்கொண்டுவாழ்வை மேம்படுத்த முடியும்.
சிவனை முழுமுதலாகக்கொண்ட மொழி தமிழ்.
ஆகவே சைவத்தையும் தமிழையும் பிரித்துப் பார்க்க முடியாது. மீறிப் பார்த்தால் தமிழ் உயிர்ப்பை இழந்துவிடும். நாம் வாழ்வை அடைய முடியாது முடியாது
சைவம் சிவனை மூலாதாரத்தின் மூண்டெழுகனளான (மூலாக்கினியை சிவாக்கினியை) முழுமுதலாகக் கொண்டது.
பிரித்துப் பார்க்க முடியாது - மீறிப் பார்த்தால் நாம் வாழ்வை அடைய முடியாது.
அண்டம் என்ற பிரபஞ்சத்தில் உள்ள பஞ்ச பூதங்களின் ஒரு பகுதிதான் பிண்டமாகிய நமது உடலிலும் இயங்குகின்றது.
நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், என்ற ஐந்து பூதங்களில் நிலம் கீழே நாம் வாழ்வதற்கு ஆதாரமாகவும், ஆகாயம் மேலே சாட்சியாகவும் இருப்பதால் நடுவில் உள்ள நீர், நெருப்பு, காற்று என்ற மூன்று வித சக்திகளை மட்டும் இயங்கும் சக்திகளாக குறிப்பிட்டுள்ளனர்.
முட்டாளாக்கிய பகுத்தறிவு
சிவத்தமிழர்களுடைய வாழ்வுப் பயணம் தடம் புரண்டுபோவதற்குக், காரணம் சிவனைத் தவறாக அறிந்துகொண்டு இருப்பதுதான், முட்டாளாக்கிய பகுத்தறிவு தமிழர்களுக்கு விளங்காமல் இருக்கவே பகுத்தறிவு-வாழ்க பகுத்தறிவு
சிவன் சுட்டியறியப்பட முடியாதவன்.
புளகாங்கிதமாக உணரப்பட வேண்டியவன்.
அவனாலன்றி எவனால் வாழ்வு கிடைக்கும்?
தமிழினரோகிகளே! நாம் என்பதை அடுத்த சந்ததி சொல்லும்.
பெயரளவில் தமிழ் என கொதிக்கின்றேன் தாய் மொழி அறியாத
தமிழில் பெயர்அறியாத தமிழ் பேச்சுஅறியாத தமிழினரோகிகளே!

## செய்திச் சுருக்கம்

1. உலகில் 250 கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு கழிப்பறை வசதியில்லை.
2. சீன எல்லையில் இந்தியா புதிய ராணுவப்பிரிவை கட்டியமைக்கிறது.
3. காணாமல் போன ஆசிரியர் எங்கே வவுனியாவில் போராட்டம்.
4. பிலிப்பைன்ஸை தாக்கிய பெரும் புயல்
5. நச்சுமாசுக்கள் காரணமாக 200 மில்லியன் பேர் பாதிப்பு
6. சிரியாவில் 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறார்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது புதியதாக வெளிவந்த செய்தி.
7. இலங்கையில் காணமல் போனவர்களின் ஆர்ப்பாட்டம்.













மலேசியா திருமுருகன் திருவாக்கு திருப்பீடத்தின்

## அனைத்துலக முருக பக்தி மாநாடு 2014



# அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், சுவிற்சர்லாந்து

## (02.05.2014 – 04.05.2014)

தமிழ்க்கடவுளாம் முருகனின் பக்தி, பெருமையை அனைத்துலகுக்கும் எடுத்துக்கூறும் முருகபக்தி மாநாட்டை அடுத்த வருடம் மே மாதம் 2ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் சுவிற்சர்லாந்து சென்மார்க்கிறேத்தன் செங்காளன் மாநிலத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மலேசியா திருமுருக திருவாக்கு திருப்பீடத்தின் ஏற்பாட்டில் செங்காளன், சென். மார்க்கிறேத்தன் கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தினால் இந்த மாநாடு நடாத்தப்படவிருக்கின்றது. சுவிஸில் உள்ள 23 இந்து ஆலயங்களின் பரிபாலன சபைகளும் இந்த மாநாட்டுக்கு அனுசரணை வழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸ் நாட்டில் வாழும் 45 ஆயிரம் புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த மாநாட்டின் வெற்றிக்கும், எழுச்சிக்கும் பங்களிப்பை வழங்கவிருக்கின்றன. சைவ சமயத்தின் தொன்மையை வெளிப்படுத்தல், முருக பக்தியை மேம்படுத்தி வளர்த்தல், மதமாற்றத்தைத் தடுத்தல் போன்ற மூன்று இலக்குகளுடன் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு வெளியீடு, கண்காட்சி, சிறுவர்களுக்கான சமய அறிவுப் போட்டி, ஆய்வுக் கட்டுரைகள் சமர்பித்தல், சிறப்பு உரை, கலை நிகழ்வு என பல்வேறுபட்ட பரிமாணங்களுடன் இந்த மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாட்டுக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுவிஸ் சென்மார்க்கிறேத்தன் செங்காளன் மாநில அரசு இந்த மாநாட்டை நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. மாநாட்டை சிறப்பாக நடத்த பல்வேறு வகையான உதவிகளையும் வழங்க மாநில அரசு முன்வந்துள்ளது. சைவ சமய அறிவைப் பெறுவதற்காக விருப்பம் கொண்டுள்ள சுவிஸ்நாட்டைச் சேர்ந்த புத்தி ஜீவிகள், பிரமுகர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க ஆர்வம் காட்டியுள்ளனர்.

முருகனின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் வாசிக்கப்படவுள்ளன. இலங்கை, இந்தியா, மலோசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் இக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

**ஆய்வுக்கட்டுரைத் தலைப்புகள்:–**

- வேத, ஆகம, புராண, இதிகாசம் மற்றும் தமிழ் இலக்கியம், பன்னிருதிருமுறை இவற்றில் முருகப்பெருமான்.
- பக்திநெறியில், சித்தர் நெறியில், தத்துவங்களில் முருகப்பெருமான்
- நாட்டுப் புறவியலில் முருகப்பெருமான்.
- உலக நாடுகளில் முருகப்பெருமான்.
- கோயில்கள், விழாக்கள், அடியார்கள், அருளாளர்கள், மந்திரங்கள், உபாசனைகள், நேர்த்திக்கடன், காவடி, வாழ்வியல் என்பவற்றில் முருகப்பெருமான்.
- அறிவியல், மருத்துவம், வானியல், சோதிடம் ஆகியவற்றில் முருகப்பெருமான்.

ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்கள் "Hindu verien, Muruga Bhakthi 2014, Industrie Str. 27, 9430 St. Margrethen, Switzerland" என்ற விலாசத்திற்கோ அல்லது "mbc2014swiss@gmail.com, or thiruupeedam@hotmail.com" என்ற இணையத்தள முகவரிக்கோ அனுப்பலாம். இது பற்றிய பதிவுகளை விரைவில் www.hindutemple-sg-swiss.ch அல்லது, www.thirupeedam.org என்ற இணையத்தளத்திலும் பார்க்கலாம் என்ற ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

மே 2 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வும், மறுநாள்கள் ஆய்வரங்காகவும் மாநாடு இடம்பெறும். அருட் பெரியார்களின் அருள் உரைகள். சிறப்புப் பேச்சாளர்களின் பேருரைகள், பேராளர்களின் கருத்துரைகள், பக்தி இசையால் நாத ஆராதனைகள், ஆடும்பிரானுக்கு நடன அஞ்சலிகள், அருட்புகழைப் போற்றும் மாநாட்டு மலர் வெளியீடு, நல்லாசிகள் வழங்கும் திருப்பீடத்திலிருந்து அருட் பிரசாதங்களும், அருட் சின்னங்களும் வழங்குதல் ஆகிய சிறப்பு அம்சங்களோடு மேலும் பல அருட் கூறுகளுடன் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

திருமுருக திருவாக்கு திருப்பீடத்தின் முருகபக்தி மாநாடு கடந்தவருடம் 2012இல் மலேசியாவில் நடைபெற்றது.

அடுத்த மகாநாட்டு 2014 இல் சுவிற்சர்லாந்தில் நடாத்துவதற்கான அங்கீகாரமான செங்கோலினை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவர் வேலுப்பிள்ளை கணேஷ்குமாரிடம் திருமுருக திருவாக்கு திருப்பீட பீடாதிபதி தவத்திரு பாலயோகி சுவாமிகள் வழங்கினார். இரண்டாவது மாநாடு சுவிஸில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது மாநாடு தென்னாபிரிக்காவில் நடைபெறும்.

சுவிஸ் ஏற்பாட்டுக் குழு





இளைப்பாறுவோர் வேலை செய்யும் காலம்

# மீண்டும் உயர்கின்றது

இளைப்பாறுவோர் வேலை செய்ய வேண்டிய காலத்தை மேலும் அதிகரிக்க பிரான்ஸ் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதை எதிர்த்து 10 செப்ரெம்பர் 2013 அன்று CGT, GCT-FO, FCU போன்ற தொழிற் சங்கங்கள் நாடு முழுவதும் வேலை நிறுத்தங்கள் மற்றும் ஊர்வலங்களை நடாத்தியுள்ளன.

இளைப்பாறுவோர் வேலை செய்ய வேண்டிய வயதெல்லையையும், வேலை செய்ய வேண்டிய காலத்தையும், காலத்திற்குக் காலம் பிரெஞ்சு அரசுகள் உயர்த்திய வண்ணமே இருந்துள்ளன.

ஆனால்பிரான்சில்சோசலிச அரசானது இளைப்பாறுவோர் வயதெல்லையை உயர்த்தும் நடிவடிக்கை இதுவே முதலாவதாக இருக்கும்.

பிரான்சில் தற்போது சாதாரண நடைமுறையில் இளைப்பாற வேலைசெய்ய வேண்டிய காலம் 41.5 ஆண்டுகளாகும். இக்காலத்தை எதிர் காலத்தில் 43 ஆண்டுகளாக உயர்த்த தற்போதைய அரசு முனைகின்றது. 43 ஆண்டுகள் வேலை செய்தமை 2035ம் ஆண்டில் இருந்து இளைப்பாறுவோர்களிற்குரிய நிபந்தனையாக்கப்படும்.

பிரான்சில் தற்போது 65 வயதில் இருக்கும் ஆண் ஒருவர் 84.3 ஆண்டுகளும் பெண் ஒருவர் 88.8 ஆண்டுகளும் வாழ முடியும் எனவும், 2020ம் ஆண்டில் இளைப்பாற்றுத் திணைக்களம் 20 மில்லியாட் யூரோக்கள் (20 000 000 000 யூரோ) கடனில் இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படும் இழப்பீட்டைத் தடுப்பதற்கு இளைப்பாறுவோர் ஆண்டை நீடிக்க அரசு முயல்கின்றது.

# களபூமிக் கலையகத்தில் விஜயதசமி விழா

களபூமி கலையகத்தினால் விஜயதசமி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் களபூமி கலையகத்தில் பயிலும் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இவ்வாறான கலைநிகழ்வுகள் ஒழுங்கான கால அவகாசத்தில் அழககடி நடத்தப்படும் அதேவேளையில் கலையகமும் மேலும் வளர்ச்சி அடைவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என காரை அபிவிருத்திசபைத் தலைவர் திரு.சிவா.தி.மகேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.





அமெரிக்காவில் 3 வயது சிறுவன் (குழந்தை) கடலில் சாதனை படைக்கும் காட்சி

# புதிய தர்ம மடாலயம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அமைந்துள்ள மாணிக்கவாசகர் மடாலயம் மார்கழி மாத திரும்வெம்பாவை உற்சவ காலத்தின் அன்னதான சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு அடியார்களுக்கான அன்னதான சேவையை சிறப்பாக செய்யும் நோக்கோடு திரு. எஸ். சிவஞானம் அவர்களால் அவர்தன் அன்னையின் ஞாபகமாக இந்த புதிய தர்ம மடாலயம் வெகு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

"தர்மகாரியங்களால் உலகம் வாழும்"









## கிழவன்காடு கலா மன்றம் நடாத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்









## காணாமல் போனவர்களின் உறவினர்கள் கௌரவமாக நடத்தப்பட்டிருக்க வேண்டும்!...





முப்பது வருட கால யுத்தம் வகை தொகையின்றி காணமால் போனவர்களின் கறை படிந்த வரலாற்றை எமக்கு தந்திருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரைக்கும் காணாமல் போதல் என்ற அவலம் தொடர்ந்து வந்திருக்கிறது.

ஆடு மேய்க்க சென்றவர்களும் திரும்பி வரவில்லை. அயல் வீட்டில் உறவு கொண்டாட போனவர்களும் திரும்பி வரவில்லை. ஊர் பார்க்க சென்றவர்கள் திரும்பி வரவில்லை. தன் பிள்ளையை மீட்டு வர போனவர்களும் திரும்பி வரவில்லை.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த வெள்ளைக்கார துரையர் பிரித்தானிய பிரதமர் கமறூனை சந்திக்க யாழில் திரண்டு நின்றனர் காணாமல் போனவர்களின் உறவினர்கள்.

ஆனாலும், கமறூனை சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு காணாமல் போனவர்களின் உறவினர்கள் யாழ் வீதிகளில் நின்று அலறி அழுத காட்சிகள் மனித மனங்களை உலுப்பி விட்டிருக்கிறது.

பெற்ற வயிறுகள் பற்றிஎரிய கண் கலங்கி நின்ற காட்சிகளின் தார்ப்பரியத்தை வெள்ளைக்கார துரைமார்கள் அதற்கு பின்னராவது உணர்ந்திருப்பார்களா என்றால் அது சந்தேகமே.

உண்மையில் அரசியல் வாதிகளை சந்திப்பதற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்திருந்த பிரித்தானிய பிரதமர் அங்கு திரண்டிருந்த அப்பாவி குடி மக்களை சந்திக்க ஓர் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

அவர்கள் நிம்மதியை நிரந்தரமாக தொலைத்து விட்ட மனிதர்கள். கௌரவமாக எங்காவது ஒரு மண்டபத்தில். அல்லது நடு வீதியிலாவது அமர வைத்து பேசப்பட்டிருக்க வேண்டியவர்கள்.

ஆட்டு மந்தைகள் போல் நடுத்தெருவில் அவர்கள் விடப்பட்டிருந்த காட்சியும், எங்களை திரும்பி பாருங்கள் என்று அவர்கள் வாகனங்களை ஒவ்வொன்றாக மறித்து மனச்சாட்சிகளின் கதவுகளை தட்டிய துயரங்களும் சொல்லில் அடங்காதவை.

இதே வேளை அத்தனை மனிதர்களையும் தாண்டி சென்ற பிரித்தானிய பிரதமரும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஏசி அறையில் உல்லாசமாக உட்கார்ந்து மூடு மந்திரம் பேசி விட்டு திரும்பியிருக்கிறார்கள்.

ஒன்றில் பிரித்தானிய பிரதமர் அந்த மக்களை சந்திக்க விரும்பியிருக்க வேண்டும். அல்லது வீதியில் திரண்டு நிற்கும் எம் உறவுகளை சந்தித்தால் மட்டுமே நாமும் உங்களை சந்திப்போம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரித்தானிய பிரதமருக்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும்.

காணாமல் போனவர்களை மீட்கிறார்களோ இல்லையோ... ஒரு மன ஆறுதலுக்காவது அந்த மக்களின் மனக்காயங்களுக்கு மருந்து தடவியிருக்க வேண்டும்.

இரண்டும் இல்லை.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள். அது எவருக்கு எதிராகவும் தருணம் பார்த்து திரும்பும்.

கண்ணீருக்கு காரணம் தேடியிருக்காவிட்டாலும் மனித கௌவரம் வழங்கியிருக்க வேண்டும்.

வட மாகாண அதிகாரத்தில் உள்ளவர்கள் இதை ஒழுங்கு படுத்தியிருக்க முடியும்!...

நன்றி தேனி

### கம்போடியாவில் சிவன் கோவில் அருகே உள்ள நிலம் :
## தாய்லாந்துக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு.

பாங்காக் : தாய்லாந்து – கம்போடியா நாட்டு எல்லையில் அமைந்துள்ள, 9ம் நூற்றாண்டை சேர்ந்த, சிவன் கோவில் அருகே உள்ள நிலம், கம்போடியா நாட்டுக்கே சொந்தமானது என, சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கம்போடியா நாட்டில், அங்கோர்வாட் என்ற இடத்தில் மிகப்பெரிய இந்துக்கோவில் உள்ளது. இந்த கோவிலை, "யுனேஸ்கோ" அமைப்பு அங்கீகரித்துள்ளது. இதே போல, கம்போடியாவில், ஐந்து, இந்து கோவில்கள் உள்ளன. தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையில், ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்த, சிவன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு இரு நாடுகளும் உரிமை கொண்டாடி சண்டையிட்டு கொண்டன. 1962ம் ஆண்டிலிருந்து, இந்த பிரச்சினை நீடித்தது.

இதனால், இப்பகுதியிலிருந்து, ஆயிரக்கணக்கான மக்கள், பாதுகாப்பு கருதி வெளியேறி விட்டனர். இருநாட்டு ராணுவமும், கோவிலை சுற்றி பாதுகாப்பில் ஈடுபட்டன. இந்த வழக்கை, சர்வதேச நீதிமன்றம் விசாரித்தது. இரு நாட்டு ராணுவமும், இந்த கோவிலிலிருந்து வெளியேறும் படி, சர்வதேச நீதிமன்றம், கடந்த ஆண்டு, உத்தரவிட்டது. இதையடுத்து, ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள், இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். "இந்த சிவன் கோவில், கம்போடியாவுக்கு தான் சொந்தம்" என, சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை தாய்லாந்து ஏற்றுக்கொண்டது. ஆனால், சிவன் கோவிலையொட்டியுள்ள, 4,6 சதுர கி.மீ. பரப்பளவுள்ள இடத்துக்கு, தாய்லாந்து தொடர்ந்து உரிமை கோரியது. இந்நிலையில், இந்த வழக்கில் தீர்ப்பு கூறிய சர்வதேச நீதிமன்றம், "சர்ச்சைக்குரிய, 4,6 சதுர கி.மீ. பரப்பளவுள்ள நிலமும், கம்போடியாவுக்கே சொந்தம்" என உத்தரவிட்டுள்ளது.

### புயலால் சிறை சேதம்:
## கைதிகள் தப்பி ஓட்டம்

மணிலா : பிலிப்பைன்ஸ் நாட்டில் புயலில் சேதமடைந்த சிறையிலிருந்து, கைதிகள் தப்பி ஓடி விட்டனர். பிலிப்பைன்ஸ் நாட்டில்; சமீபத்தில் தாக்கிய பயங்கர புயலால், 10 ஆயிரம் பேர் இறந்து விட்டதாக அஞ்சப்படுகிறது. எதிர்பார்த்ததை விட, 350 கி.மீ. வேகத்தில் வீசிய புயல் காற்றால், லெய்டி என்ற மாகாணம், மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாண தலைநகர் டக்ளோபானில், உள்ள சிறையும், புயலால் சேதமடைந்தது. இதை பயன்படுத்தி, சிறையில் இருந்த, 600 கைதிகளில், பெரும்பாலானவர்கள் தப்பி ஓடி விட்டனர். தப்பிய கைதிகளை தடுக்கும் முயற்சியில், அங்கிருந்த போலீசார், துப்பாக்கியால் சுட்டும் பலனில்லை. புயல் நிவாரண பணியில் ராணுவத்தினரும், போலீசாரும் ஈடுபட்டுள்ளதால். தப்பிய கைதிகளை தேட முடியாத நிலை உள்ளது. "புயலால் முற்றிலும் சேதமடைந்துள்ள நகரில், தப்பிய கைதிகள் எங்கு சென்று தங்குவார்கள்; எதை சாப்பிடுவார்கள்" என, கவலைப்படுகிறார் சிறை அதிகாரி.

### பீர் பாட்டிலில்
## லட்சுமி, விநாயகர் படம்

மெல்போர்ன்: ஆஸ்திரேலியாவில், பீர் பாட்டிலில், விநாயகர் மற்றும் லட்சுமி படங்கள் அச்சிடப்பட்டுள்ளதற்கு, அந்நாட்டின், இந்திய சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்துக் கடவுள்களின் படங்களை, பல்வேறு பொருட்களின் மீது, வெளிநாட்டு நிறுவனங்கள் அச்சிடுவது, அடிக்கடி சர்ச்சையை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே, ஆஸ்திரேலியாவில் நீச்சல் உடையில், லட்சுமி படம் அச்சிடப்பட்டது. சர்ச்சையை ஏற்படுத்தியது. தற்போது, ஆஸ்திரேலியாவின், நியூசவுத் வேல்ஸ் பகுதியில் உள்ள, மதுபான நிறுவனம், பீர் பாட்டிலில், விநாயகர் மற்றும் லட்சுமி படங்களை அச்சிட்டு விற்பனை செய்து வருகிறது. இதற்கு, ஆஸ்திரேலிய இந்தியர் சங்க தலைவர் யாது சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### சிங்கப்பூரில் அரசு இணையதளத்தை முடக்கிய
## வாலிபர் கைது

கடந்த வாரம் சிங்கப்பூரில் பிரதமர் லீ. மற்றும் ஜனாதிபதி டோனி தான் ஆகியோரின் இணையதளத்தில் ஊடுருவி முடக்கினர். இந்நிலையில் டவுன் கவுன்சில் இணையதளமும் முடக்கப்பட்டது. இச்சம்பவத்தையொட்டி போலீசார் தீவிர விசாரணை நடத்தி ஜேம்ஸ் ராஜ் (35) என்பவரை கைது செய்தனர். பிறகு அவர் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 3 ஆண்டு ஜெயில் தண்டனையும், ரூ .5 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

### தென் ஆபிரிக்காவில்
## பஸ்விபத்தில் 29 பேர் பலி

ஜோகன்ஸ்பர்க், தென் ஆப்பிரிக்கா நாட்டின் கிழக்கே அமைந்துள்ள மபுமாலாங்கா மாகாணத்தில் நேற்று நள்ளிரவு பஸ்சும், லாரியும் பயங்கரமாக மோதின. அதில் 29 பேர் பரிதாபமாக சிறந்தனர். மேலும் பலத்த காயம் அடைந்த 18 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. பொதுவாக தென் ஆப்பிரிக்காவில் சாலை விபத்துகளில் ஆண்டுக்கு 14 ஆயிரம் பேர் இறப்பதாகவும், அதற்கு சாலை சரிவர பராமரிக்காமல் இருப்பதே காரணம் என்று கூறப்படுகிறது.

### காரில் சென்ற போது
## ஈரான் மந்திரி சுட்டுக்கொலை

ஈரான் நாட்டில் தொழில்துறை துணை மந்திரியாக இருந்தவர் சப்தார் ரஹ்மத் அபாடி. இவர் நேற்று இரவு தலைநகர் டெஹ்ரானில் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது மர்ம நபர் துப்பாக்கியால் அவரை சுட்டுக்கொன்றான். அதில் அவரது தலை, மார்பில் குண்டுகள் துளைக்க அவர் சம்பவ இடத்திலேயே இறந்தார். உடனே போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மந்திரி பயணம் செய்த காருக்குள் 2 குண்டுகளை கண்டெடுத்தனர். மந்திரியுடன் காரில் சென்ற நபரே வாக்குவாதத்தில் ஈடுபட்டு கொலையை செய்திருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கிறார்கள்.

## தாக்குதலில் தொடர்புடையவர்

இஸ்லாமாபாத், பாகிஸ்தானில் செயல்படும் ஹக்கானி தீவிரவாத அமைப்பின் தலைவர் ஜலாலுதீன் ஹக்கானி. இவருடைய மூத்த மகன் நசிரூதின் ஹக்கானி இஸ்லாமாபாத் அருகே உள்ள பராகாஹூ என்ற இடத்தில் மசூதிக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 நபர்கள் திடீரென்று அவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். ஆனால் போலீசார் இந்த சம்பவத்தை உறுதி செய்ய மறுத்து விட்டனர். கொல்லப்பட்ட நசிரூதின் ஹக்கானி ஆப்கானிஸ் தானில் அமெரிக்க படைக்கு எதிராகவும், காபூல் நகரில் இந்திய தூதரகம் தாக்கப்பட்ட சம்பவங்களில் தொடர்புடையவர். மேலும் ஹக்கானி அமைப்பின் முக்கிய பேச்சுவார்த்தை பணிகளில் ஈடுபட்டு வந்தவர். முன்பு வடக்கு வசிரீஸ்தான் பகுதி ஹக்கானி தீவிரவாத இயக்கத்தில் அதிக ஈடுபாடு வைத்திருந்தார். ஏற்கனவே ஜலாலுதீனின் 3 மகன்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

# வட இலங்கை காரைநகரில் ஓர் மைல்கல்

### கடந்த ஐப்பசி மாதம் 14ம் நாள் (2013) காரைநகர் அபிவிருத்திப் பாதையில் ஓர் மைல்கல் மாணவ நூலக திறப்பு.

புதியதாக காரைநகர் மான்மியம் எழுத நினைப்பவர்கள் இந்த அரிய பாரிய திட்டத்தை குறித்தே அவர்கள் பலரை மனிதர்களாக உருவாக்க வேண்டும் என்ற கனவின் எதிரொலியே இந்த மாணவர் நூலகமாகும். அறியாமையை அகற்றி ஞான மயமான வாழ்வை எல்லோரும் பெறவேண்டும் என்ற ஆவலின் பலனாக இந்த மாணவர் நூலகம் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் எப்போதும் குழந்தை எழுதும் "அ" வைப் போன்றது முடிவில் அதன் தன்மையை குழந்தை உணர்ந்து விடுவது போன்றது இந்த மாணவர் நூலக வளாகம் இந்தப் பங்களிப்பை காரைநகர் மக்களும் உலகம் வாழும் காரைநகர் மக்களும் இணைந்து காரைநகர் அபிவிருத்திச் சபை ஊடாக இந்த முயற்சி எடுக்கப்பட்டவை உண்மையில் பாராட்டுதலுக்கும் வாழ்த்துதலுக்குமுரியதாகும். – *காரைநகரிலிருந்து*





## காரைநகர் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின்


# வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும்

## சிறப்புற இடம்பெற்றது

காரைநகர் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும் கடந்த சனிக்கிழமை (26.10.2013) பிற்பகல் 2.30 மணிக்கு பெரியமணல் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சிவகௌரி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சு. விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே. முருகமூர்த்தி, யாழ் மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசத் தலைவர் செ. இலகுநாதன் கிராமசேவையாளர் இ. திருப்புகழூர்சிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வெள்ளி விழா மலரின் மதிப்பீட்டுரையினை ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ச. கனகசபாபதி நிகழ்த்தி நூலினை வெளியிட்டு வைக்க காரைநகர் அபிவிருத்திச் சபை உப தலைவரும் யாழ்ற்ரன் கல்லூரி அதிபருமான வே. முருகமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார் தொடர்ந்து நிகழ்விற்கு வருகைதந்தவர்களுக்கு சிறப்புப்பிரதிகள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும், பட்டிமன்றமும் சிறப்பு நிகழ்வுகளாக தொடர்ந்து இடம்பெற்றன.
















# அதே நிலவு அதே கனவு....

கடந்த 11. 08. 2013ல் சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தோம்பல் கலந்துரையாடலில் சிறப்பு பொறுப்புமிக்க ஆங்கில ஆசானான விஜயரட்ணம் கெனடி (இணைப் பேராசிரியர் எதியோப்பிய பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பு என்னவெனில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இனிவரும் புதிய தலைமுறையிடம் தமிழை வளர்ப்பது எப்படி அல்லது தமிழின் நிலை என்ன என்பது சிறப்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம். விதிப்படி தமிழ் என்பது ஆதித்தியனின் கருத்து. புரட்சி என்பதும் நாம் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாமல் விட்டாலும் நடப்பது போன்றது. தமிழ் வளர்நிலை அப்படித்தான் இயற்கையின் இயங்கியலைப் பார்த்தால் புரிந்து விடும் ஒருவர் மரணத்தாலோ அல்லது ஒரு குழுவின் மரணத்தாலோ ஏதாவது நடக்க இருக்கும் காரியம் தடைப்பட்டதா? அல்லது அதற்காக இந்த உலகம் சோர்ந்து சோர்வடைந்து எதுவும் செய்யாமல் ஒதுங்கி நின்றதா? இல்லை (இங்கு பகவத்கீதை கீதா உபதேசம் தெரிந்து கொள்ளவும் வேண்டும்) நாம் என்ன நினைக்கிறோமோ என்றால் தெய்வம் எமது பக்கம் என்று முற்றிலும் தவறு. முதலில் மனிதர்கள் என்று பற்றி முழு நோக்கு செய்தல், புரிந்து கொள்ளுதல் அதன் பின் மொழி பதம் இரண்டாம் பட்சம் என்பதும் பற்றி தெளிவுக்கு பின் தமிழ் மொழி வளர்ப்பதற்கு ஏற்ற ஆசான்களை எம்மிடத்தில் வழங்கி வளர வைப்பது அவசியம். அதை எல்லாம் மறந்து, புதிய தலைமுறையினர் தமிழ் படிப்பது பற்றி சிந்திப்பது பற்றிய சிந்தனை நல்லது. ஆனால் நாம் தானே தமிழ் கற்பிப்போரையும் நல்ல கற்றல் திறனுடைய ஆசான்களையும் அழித்துக் கொண்டு சிந்தனை செய்வதுதான் மடமை. (உ+ம் திரு. வித்துவான் சபாரட்ணம் பல்கலைகழக பேராசிரியர்) அழித்தலுக்கு எதிராக உரக்க குரல் கொடுத்துக் கொண்டு தமிழை தமிழாக கற்றுக் கொள்வோம் என புதிய தலைமுறையினரும் தமிழைக் கற்றுக் கொள்ள வழி செய்வோம் என்பது தானே உண்மை. மேலும் புலம் பெயர் நாடுகளிலே எத்தனை நாடுகள் தமிழ் வளர அதிக அக்கறை மக்கள் எடுக்கின்றனர். என்ற வினாவும் இங்கு பார்க்க வேண்டியது அவசியம் அதைவிட இலங்கையில் வட கிழக்கு பகுதிகளில் பல தமிழ் பாடசாலைகள் ஆங்கில மூலம் கல்வி என்ற நிலைக்கு மாறிச் செல்வதையும் பார்க்க வேண்டும்.

நல்லது இந்த விருந்தோம்பல் கலந்துரையாடல் பல பழைய நினைவுகளை மீட்டதோடு தங்கள் தங்கள் கருத்துக்களை சிறப்புப்பட எடுத்துக் கூறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அன்புக்கும் மதிப்புக்கும் உரிய உறவுகளுக்கு

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி! ஆம் நெடுநாட்களாக நாம் கண்ட கனவு நனவாக உருவெடுத்துள்ளது. kalapoomykalaiyagam.com (go to google and type kalpoomy kalaiyagam) எனும் இணையதளம் முட்டையிலிருந்து குஞ்சு பொரிவது போன்று இப்பொழுது உயிர் பெற்றுள்ளது.

முதல் கட்டமாக களபூமியில் மாவுதனை என்ற இடத்தில் அமைந்துள்ள நீர்த்தேக்கம் உருவான சம்பவங்களை வர்ணித்து ஒரு கட்டுரை வரைந்துள்ளேன். இதனை இவ்விணையதளத்தில் பதிப்பித்தவர் சில எழுத்துப் பிழைகளை விட்டுள்ளார். அவற்றினைத் திருத்த முயற்சிக்கின்றேன். இவ்விணையதளம் பொதுவாகக் காரைநகர் பற்றிய விடயங்களைத் தருவதுடன் முக்கியமாக நாம் ஆரம்பித்துள்ள களபூமி கலையகத்தின் வளர்ச்சியிலும் நமது குலதெய்வங்களான திக்கரை முருகமூர்த்தி கோயில், தன்னை பிள்ளையார் கோயில், பாலாவோடை முத்துமாரி அம்மன் கோயில், துறைமுகம் சித்தி விநாயகர் கோயில், களபூமி தெருவடி பிள்ளையார் கோயில், தோப்புக்காடு முருகமூர்த்தி கோயில் ஆகியவற்றின் முன்னேற்றத்திலும் அத்துடன் களபூமியிலுள்ள பாடசாலைகளான சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், அதன் கனிஷ்ட பிரிவான சின்ன ஆலடி பள்ளிக்கூடம் (முன்னைநாளில் அமெரிக்கன் மிஷன் தமிழ் பாடசாலை), பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலை, ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் பாடசாலை ஆகியவற்றின் எதிர் கால வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தவுள்ளது.

இதற்குத் தங்கள் ஆசிகளையும் ஆதரவுகளையும் நம்பிக்கையுடன் எதிர் பார்க்கின்றேன். இலண்டனிலுள்ள 'சுந்தரமூர்த்தி நாயனார் – பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம், கனடாவிலுள்ள 'களபூமி பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம், இலண்டனிலுள்ள 'திக்கரை முருகமூர்த்தி கோயில் திருப்பணிச் சபை போன்ற அமைப்புக்கள் முன் வரவேண்டும் எனத் தாழ்மையுடன் வேண்டுகின்றேன். அது மட்டுமன்றி ஸ்ரீலங்காவிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலுமுள்ள களபூமியைத் தமதும் தமது மூதாதையரின் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் இப்பணிக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். களபூமி தற்சமயம் சில விடயங்களில் பின் தங்கியுள்ளது. நாமெல்லோரும் ஒருமனத்துடன் முயற்சித்தால் களம் கண்ட களபூமி மீண்டும் வளம் நிறைந்த பூமியாக மாற்றலாம். தங்கள் கருத்துக்களை நாடுவதுடன் மீண்டும் அனைவரும் kalapoomykalaiyagam.com மூலம் உறவாடுவோம். தற்சமயத்திற்கு pamasi@yahoo.co.uk என்ற எனது மின்னஞ்சல் விலாசத்தினூடாகத் தொடர்புகொள்ளவும்.

அன்பன்

**சிவா தி. மகேசன்.**

விளானை, களபூமி, காரைநகர்

Freiplatzalcion நிறுவனத்தால் நடாத்தப்படும்

# பாசல் தமிழ் பாடசாலையின் கலைவாணி விழா

## 26.10.2013 சனிக்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது

பாசல் மாநில கல்வி அதிகாரிகள் உட்பட பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள். சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடனம் நாடகம் பாட்டு, அபிநயம் என எல்லா அம்சங்களும் நிறைந்து சபையோரை மகிழ்வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
























## பிருத்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் 2013ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம்



பிருத்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் 2013ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (22.09.2013) லண்டன் மாநகரில் நடைபெற்றது. திரு. சரவணபவான் அவர்களின் தேவாரத்துடன், பிற்பகல் 3.30 மணியளவில் தலைவர் திரு. ப. தவராஜா தலைமையில் கூட்டம் ஆரம்பமானது.

நீத்தார் பெருமையுடன் (மௌன அஞ்சலி) தலைவர் தனது வரவேற்புரையை நிகழ்த்தியிருந்தார். செயலாளரின் அறிக்கை, பொருளாளர் கணக்கறிக்கை அவை முன் அரங்கேற்றி அங்கீகாரம் பெற்றது. கூட்டத்தில் யாப்பு திருத்தம் முக்கிய இடத்தை பெற்றிருந்தது. யாப்பில் 10 திருத்தங்கள் இனி வரும் நிர்வாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சில :

- கடந்தகால ஓய்வுபெற்ற மூன்று தலைவர்கள் கண்டிப்பாக நிர்வாக சபைக்குள் (போஷகர்களாக) இருந்தாக வேண்டும்.
- தலைவராக நியமிக்கப்படுபவர் குறைந்த பட்சம் கடந்த 2 வருடங்கள் நிர்வாக சபைக்குள் சேவையாற்றி இருக்க வேண்டும் என்பனவாகும்.

### 2013 - 2014ற்கான நிர்வாகசபை பின்வருமாறு

| | |
|---|---|
| தலைவர் | - ப. தவராஜா |
| உப தலைவர் | - இளையதம்பி தயானந்தா |
| செயலாளர் | - சோ. சிவபாதசுந்தரம் |
| உப செயலாளர் | - செ. மனோகரன் |
| பொருளாளர் | - ந. ரவீந்திரன் |
| உப பொருளாளர் | - பொ. ஞானானந்தன் |

### நிர்வாகசபை உறுப்பினர்கள்.

S. சரவணபவான்
K. விக்னேஸ்வரன்
S. கிருபாகரன்
S. தில்லைநடராஜா
T. இரகுபதிராஜா
திருமதி K. தர்மநாயகம்
திருமதி C. சர்வானந்தன்

### போஷகர்கள்

இ. சுந்தரதாசன்
வி. நாகேந்திரன்

நன்றி.
பிருத்தானியா காரை நலன் புரிச் சங்கம்

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., SRI LANKA. TEL : +94 11 2330195